# உரையாசிரியர்கள்

(முதற் பகுதி)

சு. அ. இராமசாமிப் புலவர்

ஒற்றுமை ஆபீஸ்
நெ. 8, வியாச ராவ் தெரு தியாகராய நகர்
சென்னை

உரிமையுடையது] 1946 [1-0-0

# உள்ளுறை


புறவுரை
1. நக்கீரர் .... .... 1
2. கல்லாடர் .... .... 10
3. மதுரையாசிரியர் .... .... 15
4. இளம்பூரணர் .... .... 20
5. சேனாவரையர் .... .... 28
6. நச்சினார்க்கினியர் .... .... 33
7. பரிமேலழகர் .... .... 45
8. அடியார்க்கு நல்லார் .... .... 52
9. மயிலைநாதர் .... .... 58
10. மயிலேறும் பெருமாள் பிள்ளை .... 62
11. சாமிநாத தேசிகர் .... .... 67
12. சங்கர நமச்சிவாயப் புலவர் .... 72
13. வைத்தியநாத தேசிகர் .... 77
14. சிவஞான முனிவர் .... .... 81
15. இராமாநுசக்கவிராயர் .... 86
16. ஆறுமுக நாவலர் .... .... 95


56830

# புறவுரை

அகத்தியம் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களின் பொருளும், பிறநூல்களின் பொருளும்; அந்நாளிலே நூலாசிரியர்களிடமிருந்தே பாடங்கேட்கப் பெற்று, வழிவழி வாய்மொழியாகவே வழங்கிவந்தன. உரையையெழுதிவைக்கும் வழக்கம் நீண்ட காலமாகக் கையாளப்பெறவில்லை. மூலத்தை யெழுதுதலே பெருந் தொல்லையாக விருந்தநாளில், அதன் உரையையும் எழுதுதல் எவ்வாறு சாலும்? இதனால்தான் உரையை யெழுதும் வழக்கம் அந்நாளில் மிகுதிப்படவில்லை போலும். கற்றலிற் கேட்டலே சிறப்புடைத்தாதலின், உரைகளைத்தாமே படிப்பதைவிட ஒருவரிடங்கேட்டறிதலே மிகச்சிறந்ததென்பது அந்நாளிலும் இந்நாளிலும் அறிஞர்கள் துணிபாகும்.

காலப்போக்கில் எழுதுவதற்குரிய சாதனங்கள் பெருகிவந்தமையானும், வேறுபலகாரணங்களானும் உரையையெழுதும் பழக்கம் உண்டாயிற்று. உரையெழுதும் பழக்கம் இறையனார் அகப்பொருளுரைக்குப் பின்னரே தோன்றிற்று அல்லது மிகுதிப் பட்டது என்று கூறலாம். நக்கீரனார் கூறிய களவியலுரை எவ்வளவோ காலத்திற்குப் பின்னரே எழுதப் பெற்றதென்பதை அவ்வுரையின் வரலாற்றால் ஒருவாறுணரலாம்.

இளம்பூரணர் சேனாவரையர் நச்சினார்க்கினியர் போன்ற பேரறிவாளர்கள் அந்நாளில் உரையெழுதும் வேலையில் ஈடுபடாதிருந்திருப்பார்களாயின்; நாம்

இற்றை ஞான்று பலநூல்களின் பொருளை எளிதாக அறிதல் இயலாததாக முடிந்திருக்கும்.

நூல் செய்த நூலாசிரியர்களோ அன்றி உரை செய்த உரையாசிரியர்களோ தம்முடைய வரலாற்றின் ஒரு சிறு பகுதியைத்தானு முரைத்தாரல்லர். தன்னை யடைந்தாரனைவரையும் மேலே போகச்செய்யும் ஏணி, தான்மட்டும் மேலேபோகாது நின்று விடுதலையொப்ப; இந்நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும், பிறருக்குப் புலப்படாத பொருள்களைத் தாம்புலப்படுத்திவிட்டுத், தம்மைப்பற்றிமட்டும் பிறர்யாதும் அறிந்துகொள்ளாத படி செய்துவிட்டுச் சென்றுவிட்டனர். இந்நூலுரை யாசிரியர்களோ அன்றி அவர் காலத்திலிருந்த பிறரோ, இவர்களைப் பற்றிச் சிறு குறிப்பேனும் எழுதி வைத்திருந்தனராயின் இந்நாளில் அவர்களைப்பற்றி நாம் எவ்வளவோ செய்திகளை யறிந்து கொள்ளலாம். அதற்குயாதும் வழியில்லாது போயிற்று.

'உரையாசிரியர்கள்' என்னும் இந்நூல் உரையாசிரியர்களுடைய வரலாற்றைக் கூறற்கெழுந்ததன்று. அவரைப்பற்றிய சில செய்திகளையறிந்து கொள்ளற் பொருட்டேயாம். ஆதலின் இந்நூலினிடத்து எவருங் குறை காணார்களென்றெண்ணுகின்றேன்.

1—2—1946<br>
பைந்தமிழ்ப்பண்ணை<br>
கருப்பக்கிளர்<br>
தஞ்சை ஜில்லா

சு. அ. இராமசாமி.

# உரை யாசிரியர்கள்

## க. நற்கீரர்

### பெயர்

இவருடைய பெற்றோர் இவருக்கிட்ட பிள்ளைப் பெயர் இன்னதுதான் என்று துணிதற்கு ஏதுயாது மின்று. சிலர், 'பாலப்பன்' என்பது இவருடைய பிள்ளைப் பெயராகவிருக்கலாமென்றும், பிற்காலத் தில் எவரோ இப்பெயரையே, 'கீரர்' என்று மாற்றி; 'ந'கரத்தையும் சேர்த்து 'நக்கீரர்' என்று அமைத்து விட்டனர் என்று எண்ணுகின்றனர். (க்ஷீரம்-கீரம்-பால்) இதற்கு யாதும் ஆதாரமிருப்பதாகத் தெரிய வில்லை.

நூல்களில் இவருடைய பெயர், 'மதுரைக் கணக்காயனர் மகனார்' நக்கீரனார் என்று வழங்கி வருகின்றது. இவருடைய இளமைப்பெயர் யாதா யினுமாகுக. இவருடைய வாக்கின் இனிமையையும் நன்மையையும் நன்குணர்ந்த உடனுறை புலவர்கள் இவருக்கு 'நற்கீரர்' என்று காரணச் சிறப்புப்பெயர் கொடுத்திருக்கலாம். சங்கப்புலவர்களிற் பெரும் பான்மையினர் பெயர் சிறப்புப்பெயராகத்தான் உள்ளன.

### இடம்

தோன்றிய இடமும் வசித்திருந்த இடமும் மதுரை யென்பது, இவருடைய பெயருக்கு முன் வரும் அடையால் நன்கு அறியப்படும். இவருடைய வரலாற்று நிகழ்ச்சிகளும் இதற்குத் தக்க ஆதாரமாகும்.

### காலம்

இவருடன் வசித்திருந்த பிறபுலவர்கள் அரசர்கள் முதலாயினோரின் காலத்தைக்கொண்டும், கடைச்சங்க காலத்தைக்கொண்டும், இவருடைய காலம். கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளென்று துணியப் பெறுகின்றது.

### குலம்

இவரது குலம் இன்னதென எவராலும் வரையறுத்துச் சொல்ல வியலாது. "சங்கறுப்பதெங்கள் குலம்" என்னும் வெண்பாவைக்கொண்டு இவருடைய குலத்தை வரையறுக்க வொண்ணாது. இவ் வெண்பா புனைந்துரை யென்பதற்கு யாதும் ஐயமின்று.

### சமயம்

இவருடைய சமயம் சைவசமயமேயாமென்பது; இவர் பாடியுள்ள நூல்களாலும் வரலாற்று நிகழ்ச்சிகளாலும் அறியக் கிடக்கின்றது.

### வாழ்க்கை வரலாறு

மதுரையில் அந்நாளில் வாழ்ந்திருந்த தத்தனார் என்பவருக்கு இவர் மகனாகத் தோன்றினார். இத் தத்தனார் கல்விக்கூடம் அமைத்துப் பலருக்குக் கல்வியறிவு புகட்டியவர் என்பது, கணக்காயனார்

என்னும் அடையால் அறியப்பெறுகின்றது. இக் கணக்காயனார் நல்ல புலமைநூல் அறிஞராவர்.

குறுந்தொகையில் இவருடையதாக ஒரு செய்யுளுங் காணப்பெறுகின்றது. இத்தத்தனுக்கு மகனாகத் தோன்றிய கீரனார், கற்கவேண்டியவைகளை யெல்லாம் மிக விளமையிலதானே தன் தந்தையிடம் இனிது கற்றுணர்ந்தார். சங்கப் புலவர்கட்குத் தலைமைப் புலவராகத் தழைத்தினிதிருக்கும் மாண்பும் இவருக்குத் தனியுரிமையுடையதாயிற்று. இவர் தலைமையிற் புலவர்கள் பலர் குழுமி நூலாராய்ச்சி செய்துள்ளனர். இப்புலவர்கள் குழுமியிருந்த விடமே கடைச்சங்கமெனப் பெயர் பெறலாயிற்று.

மதுரைச் சொக்கநாதக் கடவுள் இயற்றியனுப்பிய "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் பாவினை இவர் மறுத்துரைத்தன ரெனவும், அதுபற்றி வெகுண்ட மதுரைக் கடவுள் இவருடைய குலத்தின் தாழ்வினைக் கூறி இகழ்ந்துரைத்தன ரெனவும், நற்கீரரும் இறைவனை யெதிர்த் திகழ்ந்தனரென வும், அதுபற்றிப் பின்னும் வெகுண்ட மதுரைக் கடவுள் தமது நுதல்விழியைத் திறந்து காட்டின ரெனவும், நற்கீரர் எதற்கும் அஞ்சாது இறுமாந்து பதிலுரை வழங்கினரெனவும், இத்தீவினையால் வெப்புநோயடைந்தவுடன் அதற் காற்றாது பொற்றாமரையில் வீழ்ந்தனரெனவும், பின்னர் சங்கப் புலவர்களுடைய வேண்டுகோளால் ஆலவாய்க் கடவுள் அவரைக் கரையேற்றிப், பொதியப் பொருப்புறை குறுமுனிவர்பால் இலக்கணம் பயில

வனுப்பினரெனவும் திருவிளையாடற் புராணக் காதை செப்புகின்றது. ஆராய்ச்சியாளரும் இப் புராணக்காதை வழியேசென்று இடர்ப்பாடெய்து கின்றனர்.

சண்பகமாறன் தனதுள்ளக் கிடக்கையை விளக்கிக் கவிபாடுமாறு விரும்பியதும், அதற்குப் பரிசளிப்பதாக அறிவித்ததும் உண்மையாக விருக் கலாம். தகுந்த புலவர் எவரேனும் "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் பாவினையாத்து 'ஏழைப் பார்ப்பான் பரிசிலை யெய்துக' வெனக் கொடுத்து மிருக்கலாம். அதனை நக்கீரனார் மறுத்தும் இருக் கலாம். இதனை இறைவன்மாட்டேற்றி நக்கீரனா ரையும், அறிவு நிரம்பப்பெறாத புல்லறிவாளர்க ளைப்போலப் புனைந்துரைப்பதால் நேரும் பயன் தா னென்னையோ? ஏழைப் பார்ப்பானுக்குப் பொரு ளளிக்க வேண்டுமாயின், அதன்பொருட்டுச் செய் யுள் செய்யவும் கழகத்திற்கேகிக் கலாம் விளைக்கவும் வேண்டுங்கொல்? அவ்விறைவன் திருவுளங்கொண் டால் அவ்வேழைப்பார்ப்பான் குபேர செல்வத்தை எளிதிலெய்தானோ? நுதல்விழியைக் காட்டியபின் னர்க்கூட நக்கீரர் அஞ்சாது குற்றங்கூறினர் என்னுஞ்செய்தி, நக்கீரனாருக்குத் தாழ்வு கற்பிப்ப தாகுமேயன்றி உயர்வு கற்பிப்பதாகாது. இக் கூற்றால் "மூர்க்கனும் முதலையுங் கொண்டதுவிடா" என்னும் முதுமொழிக்கு நக்கீரனாரும் ஓரெடுத்துக் காட்டாக ஆகிவிடுகிறார்.

புராணம் புனைந்துரைப்பார் புனைந்துரைக் காதைகளை ஒரொழுங்கு படுத்தித்தான் கற்பிப்பர்.

அத்தன்மைகொண்டு, முற்று முண்மையென்று துணிந்து விடுதல் சால்புடைத்தன்று.

நற்கீரனார் தமக்கோ ரிடுக்கண் நேர்ந்துழி ஆறுமுக விறைவனைப் பாடி அவ்விடுக்கண் தொலையப் பெற்றார். ஆற்றுப்படை வரலாறு சிறிது மாற்றிக் கூறப்பட்டிருக்கிறது. நற்கீரனார் கலையறி புலமையோடு இறைவன் மாட்டும் முருகக்கடவுண் மாட்டும், பேரன்பு மிக்குடையாரென்பது அவர் தம் நூல்வழிகளானே நன்குணரப்பெறும். இவர் பல புண்ணியபூமிகட்குச் சென்று இறைவனை வணங்கிய சீர்த்தி மிக்குடையவர். "கற்றதனால் ஆயபயன் என்கொல்? வாலறிவன், நற்றாள் தொழா ரெனின்" என்னும் திருவள்ளுவனாரின் பொய்யாமொழிக்கு இப்புலவர்பிரான் தக்க சான்றாக விளங்கினார். கல்வியறிவோடு தெய்வத்திருவருளும் இவர் கைவரப் பெற்றவராதலின், இவர் வாக்கு இயம்பிய வண்ணம் இயலுந்தன்மை மிக்குள்ளதாக வமைந்திருந்ததென்று நாம் நம்பலாம்.

இப்புலவர்பிரான் சங்கத் தமர்ந்து தமிழாராய்ந் திருந்தகாலத்தில் 'கொண்டான்' என்னும் பெயரினனும், வடமொழி வல்லானுமாகிய சக்கிரியொருவன் சங்கத்தைச் சார்ந்து; 'வடமொழியே சிறப்புடையது தமிழ்மொழி சிறப்புடையதன்று' என்று தமிழை யிழிந்து வடமொழியை உயர்த்தி வல்லடிவழக்குப் பேசினன் எனவும், இதனால் வெகுண்ட நற்கீரனார், எமது தமிழ்மொழியின் சீர்த்தியை நினக்குக் காட்டுவேமென்று;

"முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பாண கபிலரும் வாழி—அரணிலா [டூர்ன்
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்
ஆனந்தஞ் சேர்க்கசுவா கா"

என்று ஒருவெண்பா வுரைத்தனரெனவும், அவன் அப்போதே இறந்துபட்டான் எனவும், பின்னர் மற்றைப் புலவர்களின் வேண்டுகோட்படி;

"ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தால் காலக்கோள் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையால்
செந்தமிழே தீர்க்கசுவா கா"

என்று பாட அவன் உயிர்த்தெழுந்து, தமிழ்மொழியின் பெருமையினையுஞ், சங்கப் புலவர்களின் தன்மையினையும், பெரிதும் வியந்து வாழ்த்திச் சென்றனன் எனவும் ஒரு வரலாறு கேட்கப்படுகின்றது. இவ்வரலாறு, நச்சினார்க்கினியர் பேராசிரியர் முதலியவர்களாலும் சுட்டிக் காட்டப்படுகிறபடியாலும், அந்நாளில் வசைகவிவாணர்கள் ஆற்றல் மிக்குடையாராக விளங்கினரென்பது பிறநூல்கள் பலவற்றின் வாயிலாகவும் நாம் அறிதலின் இந்நிகழ்ச்சியினை நாம் ஒருவாறு நம்புதலும் கூடும். இந்நிகழ்ச்சிக்கும் இறைவனோடு வாதிட்ட கதைக்கும் எவ்வளவோ ஏற்றத்தாழ்வுகளுண்மையின் இதனை ஐயப்படவேண்டியதின்று.

## இலக்கண இலக்கியப் பயிற்சி

இவர் அக்காலத்தில் வழங்கிய எல்லா நூல்களிலும் பயிற்சி மிக்குடையாரென்பது, இவரியற்றியுள்ள நூல்களாலும் உரைகளாலும் நன்குணரப்

பெறும். இவர் தாமியற்றிய இறையனாரகப்பொருளுரையில் மதுரைக்கோவை என்னும் ஒரு கோவையினை மேற்கோளாக வெடுத்துக் காட்டியிருக்கின்றார். தொல்காப்பியம், நற்றிணை, அகநானூறு, குறுந்தொகை முதலிய நூல்களையும் மேற்கோளாக வெடுத்துக் காட்டியுள்ளார்.

### சமகாலத் தாசிரியர்கள்

இவர் கடைச்சங்க காலத்தினராதலின், கடைச்சங்கத்திலிருந்து நூலாராய்ச்சி செய்த புலவர்களனைவரும் இவருடைய காலத்தினரே.

### இவர்செய்த உரை

இறையனார் என்னும் புலவர் பெருமான் இயற்றிய அகப்பொருணூலுக்கு இவர் திருத்தமான விருத்தியுரை செய்தார். இவ்வகப்பொருணூல் ஆலவாய் மேவிய இறைவனாலே செய்யப்பெற்றதாக வழங்குகின்றது. இறைவன் திருவருளை மிகவும் பெற்று இறைவன்போன்றே சீர்த்தியொடு விளங்கிக்கொண்டிருந்த ஒரு பெரும்புலவராற் செய்யப்பெற்று, இறைவன் திருமுன்பு வைக்கப்பெற்றதாதல் வேண்டும்.

இவ்வுரை, பிறபுலவர்களும் உருத்திரசன்மரென்னும் முருகக்கடவுளின் கூறுந் தன்மை பொருந்திய புலவரும் இருந்தவிடத்தில் அவைக்கள மேற்றப்பட்டது. முதலில் இவ்வுரை எழுதப்பெறுமவிருந்து நீண்ட காலத்திற்குப் பின்னர்தான் எழுதப்பெற்றதோ வென்றும் நாம் ஐயப்படுதற் கிடமுள்ளது. எதனாலெனின்;

"மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங்கொற்றனார்க் குரைத்தார்; அவர் தேனூர்க் கிழார்க் குரைத்தார்; அவர் படியங் கொற்றனார்க் குரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ் சுவனார்க்குரைத்தார்; அவர் மணலூராசிரி யர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க் குரைத்தார்; அவர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்குமார னார்க் குரைத்தார்; அவர் திருக்குன்றத் தாசிரியர்க் குரைத்தார்; அவர் மாதவளனார் இளநாகனார்க் குரைத்தார்; அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க் குரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை;"

என முதற் சூத்திரவுரையிலே உரைக்கப்பட் டுள்ளமையின் என்க. உரையை எழுதுதலாகிய வழக்கம் மிகப் பிற்காலத்திலேதான் தோன்றி யிருக்கின்றது. இறையனார் அகப்பொருளானூலே முதலாவது உரைநூலென்றும், நக்கீரரே முத லாவது உரையாசிரியரென்றுந் துணியலாம். இவ் வுரை, வழிவழி வாய்மொழியாக வழங்கிவந்து பிற் காலத்தில் எழுதப்பெற்றமையின், நக்கீரருடைய தன்றென்றும் சிலர் வாதிப்பர்.

### நற்கீரர்செய்த பிறநூல்கள்

இறையனார் அகப்பொருளுரையைத் தவிர, 1. திருமுருகாற்றுப்படை, 2. நெடுநல்வாடை, 3. கைலைபாதி காளத்திபாதியந்தாதி, 4. திருவீங் கோய்மலை எழுபது, 5. திருவலஞ்சுழி மும்மணிக் கோவை, 6. திருவெழுகூற்றிருக்கை, 7. பெருந்தேவ பாணி, 8. கோபப் பிரசாதம், 9. காரெட்டு, 10. போற்றித் திருக்கலிவெண்பா, 11. திருக்கண்

ணப்பதேவர் திருமறம், 12. நற்கீரர் நாலடி நாற்பது ஆகிய செய்யுணூல்களும் இவராற் செய்யப் பெற்றுள்ளன. இவற்றுட் சில நற்கீரனார் செய்த தன்றெனை எண்ணுவாருஞ் சிலர் உளர்.

## உரைநயம்

இவர் இறையனார் அகப்பொருளுக்குச் செய்துள்ள உரை தற்காலக் கலாசாலைகளில் ஆசிரியன்மார் மாணவர்கட்குச்செய்யும் விரிவுரையைப்போன்றது. முதற் சூத்திர விரிவுரையிலேயே முதலிடைக்டைச்சங்க வரலாற்றுச் செய்திகள் நூல் வரலாறு முதலியன எழுதப்பெற்றுள்ளன. உரைநடைகள் ஒரே போக்கில் அமைந்தனவல்ல. சில சிறியனவாகவும் பல நீளமானதாகவும் அமைந்துள்ளன. ஐந்திணை வரலாறும் வேண்டிய அளவு கூறப்பட்டுள்ளது. இந்நூல் ஒன்றனே அகப்பொருட் செய்திகள் முழுவதையும் ஒருங்குணரலாம். இலக்கண முடிபு முதலியன மிக இன்றியமையாத விடங்களில் மாத்திரம் விரித்துரைக்கப்பட்டுள்ளன. உரையின் போக்குக் கதையைப் போன்றது. கற்பாருள்ளத்தில் களை தட்டாது தன் வழியே இழுத்துச் செல்லும் தன்மை மிக்கது. இத்தன்மை இவ்வுரை யொன்றினுக்கே யமைந்த தனியுரிமையுமாகும்.

## உரைப் போக்கு

அன்பி னைந்திணைக் களவெனப் படுவ(து)
அந்தண ரருமறை மன்றல் லெட்டனுட்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர்.

இதன் பொருள்:—அன்பின் ஐந்திணைக்களவு எனப் படுவது - அன்பினையுடைய ஐந்திணையுட் களவு எனப்பட்ட ஒழுக்கம்; அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள் - அந்தணர் என்பார் பார்ப்பார், அருமறை என்பது வேதம், மன்றல் என்பது மணம், எட்டு என்பது அவற்றது தொகை; கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்-கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் ஒழுக்கினைக் களவென்று சொல்லுவர் கற்று வல்லோர் என்றவாறு.

இனி 'என்மனார்' என்பது, 'என்ப' என்னும் முற்றுச்சொற் 'குறைக்கும் வழிக் குறைத்தலும்' என்பதனாற் பகரங் குறைத்து, 'விரிக்கும்வழி விரித்தல்' என்பதனான் 'மன்' 'ஆர்' என்பன இரண்டிடைச்சொற்பெய்து விரித்து, 'என்மனார்' என்றாயிற்று. என்மனார் என்பது புலவர் என்னும் பெயர் கொண்டு முடிந்தது. முற்றுச்சொல் எச்சப்பெயர் கொண்டு முடியுமாகலினென்பது.

---

## உ. கல்லாடர்

### பெயர்

கல்லாடம் என்பது ஒரு சிவத்தலம். அது பாண்டிநாட்டகத்தது.

"கல்லாடத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்"

என்பது மணிவாசகப் பெருமான் திருவாக்கு. இவர் இத்தலத்திற் பிறந்தமையான் இப்பெயரை இடவாகுபெயரர்கப் பெற்றனரா? அன்றிக், கல்லா

டம் என்னும் நூலைச் செய்தமையின் இப்பெயரைப் பெற்றனரா என்பது துணியக்கூடாத தொன்றாகும். எது எவ்விதமாயினும் இவரதிடுகுறிப் பெயர் மறைந்து விட்டதென்பது மாத்திரம் ஒருதலை.

## இடம்

இவர் வாழ்ந்திருந்த இடம் மதுரையென்று துணியப் பெறுகின்றது.

## காலம்

இவருடைய காலம் கடைச்சங்க காலமாகும்.

## குலம்

இவருடைய குலத்தைப்பற்றி யொன்றுந் தெரியவில்லை.

## சமயம்

இவருடைய சமயம் சைவசமயமென்பது கல்லாடத்தால் நன்கு பெறப்படும்.

## வாழ்க்கை வரலாறு

இவர் கடைச்சங்கத்திலிருந்த புலவர்களி லொருவர். இவர்,

"ஒல்காப் பெருமைத் தொல்காப் பியத்திற்
குரையிடை யிட்ட விரகர்கல் லாடர்''

என்று புகழ்பெற்றவர். இவருடைய தாய்தந்தையர் முதலியோரைப்பற்றி யொன்றும் விளக்கமாகவில்லை. இவர் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் - அம்பர் கிழான் - அருவந்தை பொறையாற்றுக் கிழான் முதலியவர்களைப் பாடியவர். பதினோராந் திருமுறையில்,

'கண்ணப்பதேவர் திருமறம்' என்னும் பிரபந்தமும், தம் பெயரால் கல்லாடம் என்னும் பெயருடன் நூற்றிரண்டு அகவற்பாக்களையுடைய நூலு மியற்றியவர். திருவள்ளுவமாலையில் இவருடைய கவியும் உள்ளது. அது;

"ஒன்றே பொருளென்னின் வேறென்ப வேறென்னின்
அன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
எப்பா வலரும் இயைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி" என்பதாகும்.

தம்மனத்துத் தோன்றிய பொருளைச் சிறிதும் தட்டாத முறையிலெடுத்துப் பிறருக் குணர்த்தும் பெற்றிமிக்காரே தக்க பேரறிஞராவர். அத்தகையாருள் இக்கல்லாடர் தலைசிறந்தவ ராவர். இவர் தம் நூலுள் பெரும்பாலும் ஒவ்வோரகவலினும் மதுரை நகரைச் சிறப்பித்தும், திருவிளையாடற் கதைகளைச் சுட்டிக்காட்டியும் பாடியுள்ளார். இவர் பாண்டிநாட்டிலே பிறந்து வளர்ந்தவரென்பது கல்லாட நூலின் போக்கால் ஒருவாறுய்த் துணரக் கிடக்கின்றது. இவர் முருகக்கடவுளைத் தம்முடைய வழிபடு கடவுளாகக் கொண்டவரென்றும் எண்ணலாம். கல்லாடத்தின் முருகக்கடவுள் வாழ்த்தும் இதனை உறுதிப்படுத்தும்.

"சமயக் கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்"

என்னும் கல்லாடமொழிகளால் இவர் பல வேறு சமய ஆராய்ச்சியு முடையவரென்பது பெறப்படும்.

இவரது சிவபக்தியின் மிகுதியைக் கல்லாட நூலின் அகவற்பாக்கள் பலவற்றினும் பரக்கக் காணலாம். மாணிக்கவாசகப் பெருமானின் திருச்சிற்றம்பலக் கோவையார் அகப்பொருளியலுக்கு மாறுபடுகிற தென்று சிலர் குற்றங்கூற, அக்கூற்றை மறுத்தற் பொருட்டுத் திருக்கோவையாரின் நூறு செய்யுட்களைக் குறிக்கோளாகக் கொண்டு இவர் கல்லாடத்தை இயற்றியருளிக் கடைச்சங்கப் புலவரும் பிறருங் கூடிய பேரவைக்கண் அவைக்களமேற்றியருளினர். இவர் கல்லாடத்தை அவைக்களமேற்றுதல் புரிந்தகாலை; ஆலவாய்ப் பெருமானே அவைக் களத்தி லெழுந்தருளிக் கேட்டிருந்ததுடன் ஒவ்வொரு பாவும் முடியுந்தோறும் முடியுந்தோறுந் திருமுடியை யசைத்து விளங்கருளினரென்பது;

> "கல்லாடர் செய்பனுவற் கல்லாடம் நூறும் நூல்
> வல்லார்சங் கத்தில் வதிந்தருளிச்—சொல்லாயு
> மாமதுரை யீசர் மனமகிழ்ந்து கேட்டுமுடி
> தாமசைத்தார் நூறு தரம்"

என்னும் வெண்பாவாற் பேசப்பெறுகிறது.

### இலக்கண இலக்கியப் பயிற்சி

இலக்கண நூல்கள் பலவற்றினும் இலக்கிய நூல்கள் பலவற்றினும் இவர் மிக வல்லுநரென்பதை, இவரியற்றியுள்ள கல்லாடமே புலப்படுத்தும். கல்லாடம் மிகவும் கடிய நடையில் அமைந்துள்ளது. உரையின்றேல் எல்லோரானும் கற்றுணர முடியாது. இறுதியிலுள்ள சில பாட்டுக்கள் பேரறிஞர்களையும் மருட்டுகின்றன. ஒருவர் கல்லாடத்தை நன்கு கற்றுணர்ந்துவிடின் அவருக்கு நிக

ரான அறிவுடையோர் பிறரிலரெனக் கூறலாம். "கல்லாடத்தோடு மல்லாடாதே" கல்லாடம் படித் தவனோடு சொல்லாடாதே" என்னும் பழமொழிக ளும் வழங்கி வருகின்றன.

### சமகாலத் தாசிரியர்கள்

இவர் கடைச்சங்கப் புலவராதலின், கடைச்சங் கத்திலிருந்த நக்கீரர் முதலிய கடைச்சங்கப் புலவர்களனைவரும் இவருடன் சமகாலத்திருந்தவர் களே.

### இவர்செய்த வுரை

தொல்காப்பிய வுரை இவர் செய்தாரென்று சொல்லளவில் காணப்பெறுகிறதே தவிர, உரை வெளிவந்திருப்பதாகவோ அல்லது ஏட்டுச் சுவடி களி லிருப்பதாகவோ தெரியவில்லை.

### பிறநூல்கள்

தொல்காப்பியவுரை மேற்கூறியபடி பெயரள வில்மட்டுமிருக்கக் கல்லாடம் உரையுடன் வெளிவந் துலவுகின்றது.

### கல்லாடம்

'வேற்றுப் பிடிபுணர்ந்து தீராப் புலவி
சுற்றமொடு தீர்க்க வுய்த்த காதலிற்
கருங்கைவெண் கோட்டுச் சிறுகட் பெருங்களி
றுளத்துமின் றளிக்கும் திருத்தகு மருநூல்
பள்ளிக் கணக்கர் பாற்பட் டோங்குக்
குறிஞ்சிப் பெருந்தே னிறுலொடு சிதைத்து
மென்னகைப் பிடிக்குக் கைப்பிடித் துதவி
யடிக்கடி வணங்குஞ் சாரனட!

## ௩. மதுரை ஆசிரியர்

(பேராசிரியர்)

### பெயர்

இவருடைய இயற்பெயர் மறைந்துவிட்ட தாகவே நினைக்கவேண்டியதாக விருக்கின்றது மதுரையாசிரியர் என்பது முதலில் இவருக் குண் டான காரணப்பெயர். இவர் இளம்பூரணருக்கு ஆசிரியராவர். இளம்பூரணர் நச்சினார்க்கினிய ருக்கு ஆசிரியராவர். நச்சினார்க்கினியர், தம் முடைய ஆசிரியரான இளம்பூரணரை ஆசிரிய ரென்றும், தம்முடைய ஆசிரியரின் ஆசிரியரான மதுரையாசிரியரைப் 'பேராசிரியர்' என்றுங் குறிப் பிடுவர். இத்தகைய காரணப்பெயர்கள் தோன் றியமையானே இவருடைய இடுகுறிப் பெயர் மறைந்துவிட்டதுபோலும்.

### இடம்

இவர் மதுரையிலே வசித்திருந்தவரென்பதை இவருடைய பெயரே புலப்படுத்தும்.

### காலம்

இவருடைய மாணவராகிய இளம்பூரணரிடத் தில், நச்சினார்க்கினியர் கல்வி பயின்றிருப்பதாலும் நச்சினார்க்கினியர் பரிமேலழகர் காலத்தவரென்று தெரிகிறபடியாலும், பரிமேலழகர் இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்து இருநூற்றைம்பது யாண்டுகட்கு முன்னர் வாழ்ந்திருந்தவரென்று ஆராய்ச்சி வல்லுநர் துணிகின்றனராதலானும்

மதுரையாசிரியர் காலமும் இதே என்று ஒருவாறு துணியலாகும்.

## குலம்

இவரது குலம் இன்னதென்று துணிய முடிய வில்லை.

## சமயம்

இவர் திருக்கோவையாருக்குத் தக்க உரை யெழுதியிருக்கின்றன ராதலின் இவருடைய சமயம் சைவசமயமேயென்று துணியலாம்.

## வாழ்க்கை வரலாறு

இவருடைய வாழ்க்கை வரலாற்றை யறிதற்கு எத்தகைய ஆதாரங்களும் இருப்பதாகத் தெரிய வில்லை. இவர் இளம்பூரணர் முதலிய பல மாண வர்கட்குத் தமிழாசிரியராக விருந்த பெருமையை நோக்கின், அக்காலத்தில் இவருக்கு நிகரான பேரறிஞர் வேறெவரும் இருந்திலர் என்பது மட்டும் எளிதிற் போதரும்.

"நல்லறி வுடைய தொல்பே ராசன்
கல்வியுங் காட்சியும் காசினி அறியப்
பொருள்தெரி குறுந்தொகை இருபது பாட்டிற்
கிதுபொருள் என்றவன் எழுதா தொழிய"

என்னும் அடிகளில் பேராசான் என்பது பேராசிரி யரையே சுட்டுகின்ற தென்பது அறிஞர் துணிபு. இவர் தொல்காப்பியத்தின் அகத்திணை புறத்திணை யியல்கட்கும் திருக்கோவையாருக்கும், குறுந் தொகையில் நானூறு பாடல்கட்கும் உரையெழுதி யுள்ளார். குறுந்தொகையுரை முடிவதற்குள் இவர் பூதவுடம்பினை நீத்தார்போலும். திருக்

கோவையார் உரை சேனவரையருடையதென்றும் நச்சினார்க் கினியருடையதென்றும் கருதப்பட்டு இறுதியில்தான் இவருடைய உரையென்று முடிவு செய்யப்பட்டது. அகத்திணை புறத்திணை யியலுரைகள் நச்சினார்க்கினியருரையுடன் கலந்திருந்தமையின் அதுவும் பின்னர்தான் கண்டுபிடிக்கப் பட்டது. இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை யியற்றினரா அல்லது அகத்திணை புறத்திணை யியல்கட்கு மட்டுந்தான் இயற்றினரா என்னுஞ் செய்தி விளக்கமாகவில்லை.

### இலக்கண இலக்கியப் பயிற்சி

இவர் திருக்கோவையாருக் கெழுதியுள்ள உரையை நோக்குமிடத்து இவருடைய பரந்த பேரறிவும் இலக்கண இலக்கியப்பயிற்சி வலிமையும் அளவிடற்கரியதென்பது எளிதிற் போதரும்.

### சமகாலத் தாசிரியர்கள்

இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலிய பேரறிஞர்கள், இப்பேராசிரியர் முதுபெரும் புலவராகத் திகழ்ந்த ஞான்று இளம்புலவர்களாக இலங்கியிருந்தனரென்று எண்ணவேண்டியதாக விருக்கிறது.

### இவரியற்றியன

தொல்காப்பிய அகத்திணை புறத்திணையியல்கள், திருக்கோவையார், குறுந்தொகை நானூற்றெண்பது பாடல்கள் ஆகியவைகளைத் தவிர, வேறுரையோ அன்றித் தனிநூலோ இவர் செய்திருப்பதாகப் புலப்படவில்லை.

## உரை நயம்

இவர் தம்முடைய உரையிலே விளக்கவேண்டிய பகுதிகள் முழுமையையும் விளக்கியே செல்வர். ஒவ்வொரு சொல்லின் பொருளும் கற்போருக்கு நன்கு விளங்கவேண்டுமென்பதே இவருடைய நோக்கமாதலின், அதற்குத் தக்கபடியே பொருளெழுதுவர். ஐயப்பட நின்றவிடத்திலெல்லாம் ஒன்றினைத் துணிந்தே யெழுதுவர். கற்பாருக்கு விளங்காமலிருக்கக்கூடிய பகுதி இன்னதென்றறிந்து அதற்குத் தக்கபடி எழுதுவார். செய்யுளில் வருகின்ற பெயர்ச்சொல் முதலியவற்றையும் நன்கு விளக்கியிருக்கின்றார். இன்றியமையாதவிடங்களிலே தொல்காப்பியம், இறையனாரகப்பொருள், திருவாசகம், திருக்குறள், குறுந்தொகை, நாலடியார், தேவாரம், கலித்தொகை, சிலப்பதிகாரம், புறநானூறு முதலிய நூல்களிலேயிருந்து மேற்கோளெடுத்துக் காட்டியுள்ளார். திருவாதவூரடிகளின் திருச்சிற்றம்பலக் கோவையாருக்கு இவருரை பேரணிசெய்து பிறங்குகின்றதென்பதனைக் கற்றாரனைவரும் முற்ற வறிவர்.

## உரைப் போக்கு

### திருக்கோவையார் முதற்பாட்டு

திருவளர் தாமரை சீர்வளர் காவிகளீசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள் கொண்
[டோங்கு தெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி யனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்
[கின்றதே

திருவென்பது கண்டோரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம். எ-று திருமகடங்குந் தாமரை யெனினு மமையும், பூங்குமிழெனன்பது முதலாகிய தன்பொருட்கேற்ற அடையடுத்து நின்ற தோராகு பெயர். ஈசர் தில்லையென்பதனை எல்லாவற்றோடுங் கூட்டுக. பல நிலங்கட்கு முரிய பூக்களைக் கூறிய வதனால், நிலமயக்கங் கூறியவாறாயிற்று. ஆகவே, பல நிலங்களிலுஞ் சென்று துய்க்கு மின்பமெல் லாந் தில்லையின் வாழ்வார் ஆண்டிருந்தே துய்ப்ப ரென்பது போதரும், போதர இம்மை யின்பத்திற் குத் தில்லையே காரணமென்பது கூறியவாறாயிற்று. ஆகவே, ஈசர் தில்லையென்றதனான், மறுமை யின் பத்திற்குங் காரணமாதல் சொல்லாமையே விளங் கும். செய்யுளாதலாற் செவ்வெண்ணின் றொகை தொக்கு நின்றது. ஒங்குமாலையென விளையும். தெய்வமருவளர் மாலையென்றதனால், தாமரை முத லியவற்றா னியன்ற பிற மாலையோடு இதற்கு வேற் றுமை கூறியவாறாம். வாய்ந்தென்பது நடையின் வினையாகலாற் சினை வினைப்பாற்பட்டு முதல்வினை யோடு முடிந்தது. உருவளர் காமன்றன் வென்றிக் கொடி யென்றது நுதல்விழிக்குத் தோற்று உரு விழப்பதன்முன் மடியாவாணையனாய் நின்றுயர்த்த கொடியை. அனநடை வாய்ந்தென்பதற்கு அவ் வவ் வியல்பு வாய்ப்பப் பெற்றெனினு மமையும்.

---

## ௪. இளம்பூரணர்

(உரையாசிரியர்)

இளம்பூரணன் என்பது இளம் பருவத்தில் தானே கல்வியறிவு ஒழுக்கங்களில் நிரம்பப்பெற்றவன் என்று பொருள் தரும். இவருடைய இடுகுறிப்பெயர் இதுதானோ; அன்றி இளம் பருவத்தில் தானே கல்வி முதலியவைகளில் நிரம்பப்பெற்றமையானே இப்பெயரைக் காரணப்பெயராகப் பெற்றனரா என்று துணியமுடியவில்லை. 'இளம்பூரணன்' என்பது முருகக்கடவுளுக்கும் ஒரு பெயரென்று சிலர் எண்ணுகின்றனர்.

### இடம்

இவர், மதுரையாசிரியர் என்னும் பேராசிரியரிடம் கல்வி கற்றவராதலின் வசித்திருந்தவிடம் மதுரையென்று துணியலாம்.

### காலம்

மதுரையாசிரியர் காலமே.

### குலம்

இவர் பார்ப்பனக் குலத்தினராக விருக்கலாமென்று சிலர் எண்ணுகின்றனர். அதற்குத்தக்க ஆதாரமெதுவுமில்லை.

### சமயம்

சைவசமயமே.

### வாழ்க்கைவரலாறு

இவர் பிறந்த இடமும் தாய்தந்தையர் பெயரும் அறியக்கூடவில்லை. 'மதுரையாசிரியர்' என்று பெரும்புகழ் பெற்று விளங்கிய புலவர் பிரானிடத்

திலே கல்வியயின்று புலமை நிரம்பப்பெற்றவர். தம்முடைய ஆசிரியர் அகத்திணை புறத்திணையியல் கட்கு மட்டும் உரையெழுதி யிருத்தலைக் கண்டு இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரையெழுத வேண்டுமென்று விரும்பி அவ்விதமேயெழுதி முடித்தார். பேராசிரியர் எழுதிய உரைகட்கும் பெருந் துணையாக விருந்தார். அரும்பெரும் நூலாகிய தொல் காப்பியம் முழுமைக்கும் உரையெழுதியமையின் இவரை, 'உரையாசிரியர்' என்று நச்சினார்க்கினியரும்பிறரும் பாராட்டுவாராயினர். நச்சினார்க்கினியர்தம் முறையில் இவரைக் குறிப்பிடவேண்டிய இடத்தில் 'உரையாசிரியர்' என்றே குறிப்பிடுவார்.

இவருடைய உரையைப் பயின்று பற்றுக்கோடாகக் கொண்டே, பிறகு சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலியோர் தொல்காப்பியத்திற்கு உரையெழுதலாயினர். தம்கொள்கைக்கு ஒவ்வாத சில விடங்களில் இவருடைய உரையை மறுக்கவுந் தொடங்கினர். மறுத்துத் தம்கொள்கையை நிலை நாட்ட முயன்றனராயினும் அவர்பால் வைத்த மதிப்பை மறந்தவரல்லர்.

உரையாசிரியராகிய இவருடைய கொள்கையைச் சேனாவரையர் மறுக்க நேரும் இடங்களில் "அவர் பிறர் மதம்பற்றிக் கூறினார் என்க,, எனவும், "மாணாக்கர்க்கு உய்த்துணரவைத்தல் அவர்க்கியல்பாகலாற்செய்யுண்முடிபென்றுகூறுராயினார்" எனவும் "உரையாசிரியர்க்கு அது கருத்தன்றென்க" எனவும், அச்சத்துடனேயே எழுதுகின்றனர்.

தொல்காப்பியம் முழுமைக்கும் முன்னர் உரையெழுதிய பெருமை இளம்பூரணரையே சாரும். இவருடைய உரையின்றேல் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் மிக நயமாக உரையெழுதுதல் முடியாத காரியமாக ஆகியிருக்கும். தொல்காப்பியம் போன்ற நூல்கட்கு முதன் முதலுரைகாண்டல் அத்துணை எளிதன்று. ஒரு நூலுக்கு ஒருவர் உரை செய்தபின் அதனைப் பின்பற்றி வேற்றுரை காண்டல் கடினமான காரியமன்று. தொல்காப்பியமென்னும் மாபெரும் சீர்த்திமிக்க நூல், இற்றை நாளில் இத்துணைச் சீருஞ் சிறப்பும் பெற்றுத்திகழ்தற்கு இவர் தம்முரையே முதற்காரணமாமென்பது புனைந்துரையாக மாட்டாது. இளம்பூரணர் துறவறத்தை மேற்கொண்டிருந்தவரென்றுஞ் சிலர் எண்ணுகின்றனர். 'இளம்பூரணவடிகள்' என்னும் வழக்குஞ் சில விடங்களிற் காணப்பெறுகின்றது. அடியார்க்கு நல்லார் தாமெழுதிய சிலப்பதிகாரவுரையிலே "உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள்" என்று கூறுகின்றார். மயிலைநாதர் தம்முடைய நன்னூல் உரையிலே, "இஃது ஒல்காப்புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வியிளம்பூரணரெனு மேதமின் மாதவரோதியவுரையென்றுணர்க" என்று மாதவர் என்னுஞ்சொல்லை இவருக்கு வழங்கியிருக்கின்றனர். 'அடிகள்' என்னுஞ்சொல் இக்காலத்திலும் அக்காலத்திலும் துறவிகளைச் சுட்டவே பயன்படுத்தப்பெறுகின்றது என்பதை அனைவரும் அறிவர். 'அடிகளென்றது துறத்தலான்' என்று அடியார்க்கு நல்லாரே

பொருளுங் கூறியிருக்கின்றார். இளங்கோவடிகள் என்பதும் ஈண்டு சிந்திக்கத் தக்கது. ஆதலின் இளம்பூரணர் நன்கு கல்விபயின்று அதன்பயனுகை நிலையாமையை யுணர்ந்து துறவறத்தை மேற் கொண்டிருந்தவரென்று நாம் துணிதலிழுக் காகாது.

### இலக்கண இலக்கியப் பயிற்சி

இவர் பன்னூலும் பயின்று திகழ்ந்தவரென் பதற்குத் தொல்காப்பியவுரை யொன்றே தக்க சான்றாகும்.

### சமகாலத்தாசிரியர்கள்

மதுரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினி யர் பரிமேலழகர் முதலியோர் இவர்காலத்தில் வசித் திருந்தவர்களாவர். மதுரையாசிரியரும் பரிமேலழ கரும் அகவை மிகுந்தவர்களாகவும் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் அகவையிற் குறைந்தவர்க ளாகவுமிருந்திருக்கலாம். தொல்காப்பியம் முழு மைக்கும் உரைசெய்ததன்றி வேறுரைகளோ தனி நூல்களோ இவர் செய்திருப்பதாகப் புலப்பட வில்லை.

### உரை நயம்

### உரைப் போக்கு

கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப

..........................................................................

இதன் பொருள். கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக்கிளந்த எழுதிணை என்ப-கைக் கிளை என்று சொல்லப்படும் பொருள் முதலாகப்

பெருந்திணை என்று சொல்லப்படும் பொருள் ஈறாக ஏழ்பொருள் முற்படக் கூறப்பட்டன என்று சொல்வார் என்றவாறு.

................................................................................................

கைக்கிளை என்ற பொருண்மை யாதோ வெனின், கை என்பது சிறுமைபற்றிவரும். அது தத்தங்குறிப்பிற்பொருள் செய்வதோர் இடைச்சொல். கிளை என்பது உறவு; பெருமையில்லாத தலைமக்கள் கிளைமை என்றவாறு: கைக்குடை, கையேடு, கைவாள், கையொலியல், கைவாய்க்கால் எனப் பெருமையில்லாதவற்றை வழங்குபவாகலின். நடுவணைந் திணைக்கண் நிலமும், காலமும், கருப்பொருளும் அடுத்துப், புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனச் சொல்லப்பட்ட அவ்வுரிப்பொருள், ஒத்த அன்பும், ஒத்தகுலனும், ஒத்தவடிவும், ஒத்த குணனும் ஒத்தசெல்வமும், ஒத்த இளமையும் உள வழிநிகழுமாதலின் அது பெருங்கிளைமையாயிற்று. முல்லை முதலாகிய ஐந்தும் முன்னர்க் கூறப்படும். பெருந்திணையாவது நடுவணைந் திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வருதலானும், எண்வகை மணத்தினும் பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் என்பன பெருந்திணையின் பாற்படுதலானும், இந்நான்கு மணமும் மேன்மக்கள் மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுட் பெருவழக்கெனப் பயின்று வருதலானும், பெருந்திணையெனக் கூறப்பட்டது.

அஃதேல், நடுவணைந் திணையாகிய ஒத்த கூட்டம் பெருவழக்கிற்றன்றோ வெனின், அஃது அன்பும்

குலனும் முதலாயின ஒத்துவரல் உலகினுள் அரிதாகலின், அருகியல்லது வாராதென்க. இந்நூலகத்து ஒருவனும் ஒருத்தியும் நுகரும்காமத்திற்குக் குலனும், குணனும், செல்வமும், ஒழுக்கமும், இளமையும், அன்பும், ஒழுங்கும், உளவழி இன்பம் உளதாமெனவும், கைக்கிளை ஒரு தலை வேட்கையெனவும், பெருந்திணை ஒவ்வாக் கூட்டமாய் இன்பம் பயத்தல் அரிதெனவும் கூறுதலான், இந்நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துணர வைத்தவாறு அறிந்துகொள்ளுக.

செந்தமிழ்த் தொகுதி ௪௨, பகுதி ௧0, ௧௧, ௧௨-ல் டி.வி. சதாசிவபண்டாரத்தார் இளம்பூரணர் வரலாற்றைப்பற்றி ஒரு கட்டுரை எழுதினர். அதனுடைய ஒரு பகுதி வருமாறு :

'தண்கட லசைவளி யுறுப்பத் திரையிதிர்
தூங்கலின் பொருட்குவைப் புணரியி லையுற
அலைவமன் மயரினை யகற்ற லெழுத்தால்
திணைதுறை யுட்கோள் இயற்றிற னறியாக்
கவர்பொருண் மாக்கண் மயக்கினுக் கிரங்கிப்
பாயிருங் காப்பியச் சுவைபல வுணர்ந்தகந்
தோய மடுத்தோர் தொல்காப் பியனுரை
முத்திற வோத்தினுக் கொத்தசீர்க் காண்டிகை
சொன்னிலை மேற்கோள் தொகுபொருள் துணிபுடன்
இயல்நூற் பாமுடி பிணைத்தடி காட்டித்
தலைகடை கூட்டித் தந்தனன் பண்டே
கொங்குவேண் மாக்கதை குறிப்புரை கண்டோன்
தன்னறி யளவையில் நல்லுரை தேவர்
பன்மணிக் குறட்பான் மதிப்பிடப் பொறித்தோன்
குணகடற் செல்லூர் மணக்குடி புரியான்

தண்முலை முகையென வெண்ணூல் சூடி
யந்தணன் துறவோர் அருமறை யுணர்ந்த
இளம்போதி பயந்த புனிதன்
இளம்பூ ரணனுரை யினிதுவாழ் கென்கென்'

அடிகள் தொல்காப்பியத்திற்கு உரையெழுதுவதற்கு முன்னரே கொங்குவேண்மாக்கதைக்குக்குறிப்புரையும் திருக்குறளுக்கு உரையும் எழுதி முடித்துவிட்டனர் என்பது இவ்வுரைப்பாயிரத்தால் வெளியாதல் காண்க. இனி, திருக்குறளுக்கு முற்காலத்தில் பதின்மர் உரை கண்டுள்ளனர் என்பது,

'தமருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி—திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தா ரிவர்'

என்னும் பழைய பாடலொன்றால் அறியப்படுகின்றது. இப்பாடலிற் குறிப்பிடப்பெற்ற பதின்மருள் இளம்பூரண அடிகள் பெயர் காணப்படவில்லை. உரையாசிரியன்மாருள் மிகமுந்தியவராகிய இவ்வடிகள் திருக்குறளுக்கு ஓர் உரையெழுதியிருப்பதை அவ்வெண்பாவைப் பாடியவர் அறிந்திருக்க மாட்டார் என்று கூறுவது எவ்வாற்றானும் பொருந்தாது. அன்றியும், திருக்குறளுக்கு உரையெழுதிய அறிஞர் எல்லோரையுங் கூறவந்த அப்பெரியார், அன்னோருள் இறுதியிலிருந்த பரிமேலழகரைக் கூறிவிட்டு மிகப்பழைய உரையாசிரியராகிய இளம்பூரண அடிகளைக் குறிப்பிடாமற்போகார். என்பது திண்ணம். ஆகவே, அவ்வெண்பா இயற்றப்பெற்ற காலத்தில் திருக்குறளுக்கு இளம்பூரணர் எழுதிய

உரை, வேறு பெயரோடு வழங்கியதாதல் வேண்டும். அங்ஙனமாயின் அவ்வுரை எப்பெயரோடு வழங்கியிருத்தல் வேண்டுமென்பது ஈண்டு ஆராயற் பாலதாகும்.

மேலே காட்டப்பெற்ற தொல்காப்பிய இளம்பூரணர் உரைப்பாயிரத்தில் அடிகள், கீழ்கடலைச் சார்ந்த செல்லூரிற் பிறந்தவரென்பதும், மறையின் வல்ல இளம்போதி என்பவரின் புதல்வர் என்பதும், துறவற நெறியில் நின்ற அந்தணரென்பதும், இளம்பூரணர் என்ற இயற்பெயருடையவரென்பதும், மணக்குடிபுரியான் என்ற தொல்குடியில் தோன்றியவர் என்பதும் சொல்லப்பட்டிருக்கின்றன. மணக்குடியுடையான் என்னுங் குடிப்பெயரே மணக்குடி புரியான் என்று பாயிரத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

இனி, நாகன்குடியுடையான், அண்டக்குடியுடையான், கடுவங்குடியுடையான், இளையான் குடியுடையான் என்னுங் குடிப்பெயர்கள் முறையே 'நாகன்குடையான், அண்டக்குடையான், கடுவங்குடையான், இளையான் குடையான்' என்று மூற்காலத்தில் வழங்கி வந்தன என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. எனவே, மணக்குடியுடையான் என்பதும் மணக்குடையான் என்று அக்காலத்தில் வழங்கியிருத்தல் வேண்டும். ஆகவே, இளம்பூரண அடிகள், மணக்குடையார் என்ற தம் குடிப்பெயராலும் தொடக்கத்தில் வழங்கப்பெற்றிருத்தல் கூடும். அங்ஙனம் வழங்கிய நாளில் இவர் திருக்குறளுக்கு எழுதிய உரை, மணக்குடையாருரை

என்று பெயர் எய்தியிருப்பதும் இயல்பேயாம். பிறகு, இவர் தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய காலத்தில் துறவுபூண்டு சிறப்புற்றிருந்தமையின் இளம்பூரண அடிகள் என்று இயற்பெயராலேயே பாராட்டப்பெற்றிருத்தல் வேண்டும். எனவே, இளம்பூரணர் என்னும் இயற்பெயரும், மணக்குடையார் என்னும் குடிப்பெயரும் ஒருவரையே குறிப்பனவாகும்.

இனி, சில ஏட்டுப்பிரதிகளில் இவர் பெயர் மணக்குடையார் என்று குறிக்கப்பட்டுள்ளதாம். அன்றியும் திருக்குறளுக்கு உரைகண்ட பதின்மர் பெயருங் கூறும் பழையவெண்பாவிலும் மணக்குடையார் என்றும் பாடபேதம் காணப்படுகிறது. ஆனல், இந்நாளில் மணக்குடவர் என்னும் பெயர் வழங்குகின்றது; எனினும் மணக்குடையார் என்று வழங்குவதுதான் பொருத்தமுடையது என்பது உணரற்பாலதாகும்.

[இதன்கீழ் இளம்பூரணர் மணக்குடையார் இருவரின் உரையொப்புமையுங் காட்டப்பெற்றுள்ளது.]

---

## ரு. சேனவரையர்

### பெயர்

சேனவரையர் என்னுஞ்சொல் சேனைகட்குத் தலைவரென்று பொருள் தருகிறது.

### இடம்

இவருடைய பிறப்பிடமும் இருப்பிடமும் பாண்டி நாடென்று பொதுவாகக் கூறலாமே

யன்றி ஊரின்னதுதானென்றுறுதியாகத் துணிந்துரைத்தற்கி யாதுமிடமில்லை.

காலம்

இவருடைய காலமும் ஏறக்குறைய ஆயிரத்து இருநூற்றைம்பது யாண்டுகட்கு முன்னரே.

குலம்

இவர் பார்ப்பன குலத்தைச் சேர்ந்தவரென்று சிலர் கூறுகின்றனர். அதற்கு அவர்கள் கூறுங் காரணம் இவர் வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்தவ ரென்பதுதான்.

சமயம்

இவருடைய சமயம் சைவசமயமே என்று கொள்ளவேண்டும். சொல்லதிகாரத்திற்கு இவர் எழுதியுள்ள உரைக்கு முன்பு, ஆனைமுகக்கடவுள், சிவபிரான், கலைமகள், அகத்தியர் ஆகிய நால்வரையும் போற்றும் பாடல்கள் காணப்பெறுகின்றன. இவைகள் இவராற் செய்யப்பெற்றனவா? அன்றிப் பிறராற் செய்யப்பெற்றுப் பிற்காறொன்று பிணைக்கப்பெற்றனவாவென்பது விளங்கவில்லை.

வாழ்க்கைவரலாறு

இவருடைய வரலாற்றுச் செய்திகளும் மறைந்தவைகள்தாம். இவருடைய பெயரைக்கொண்டு, இவர் ஒரு படைத் தலைவராகவிருந்திருக்கலாமென்றும், படைகளை மிகுதியாகவுடைய அரசராகவிருந்திருக்கலாமென்றும் ஒவ்வொருவருந் தம் மனம்போனவாறு எண்ணுகின்றனர். எது எவ்விதமிருப்பினும் இருக்க. இவர் வடமொழி தென்

மொழி எனுமிருமொழியினும் மிகவல்லுநரென்பது மாத்திரம் தேற்றம். இவருடைய வடமொழிப் புலமையை நன்குணர்ந்தே இவருடைய பெயருக்கு முன்பு "வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த" என்னுஞ் சிறப்புச்சொல் சேர்க்கப்பெற்றிருக்கிறது. தொல்காப்பியத்தின் சொல்லதிகாரப் பகுதிக்கு இவருடைய உரைதான் மிகச் சிறந்ததாகக் கொள்ளப்பெறுகின்றது. இவர் இளம்பூரணர் உரையைத் தம்முரையின் சிலவிடங்களில் மறுப்பதாலும்; இளம்பூரணரை 'உரையாசிரியர்' என்று குறிப்பதாலும், இவர் இளம்பூரணருக்குப் பின்னரே உரையெழுதினாரென்பது ஐயமறப் பெறப்படுகின்றது.

## இலக்கண இலக்கியப் பயிற்சி

இவர் வடமொழி தென்மொழி என்னும் இருமொழியிலும் அக்காலத்திலிருந்த நூல்களில் மிக வல்லுநரென்பது இவருடைய உரையின் மாட்சியால் எளிதிலுணரப்படும்.

## சமகாலத்தாசிரியர்கள்

மதுரையாசிரியர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலியோர் இவருடைய காலத்தவர்களே.

## பிறஉரை அல்லது நூல்

தொல்காப்பியச் சொல்லதிகாரவுரையைத் தவிர வேறு உரையோ அல்லது தனியோ இவர் செய்திருப்பதாக இதுவரை யெதுவும் அகப்படவில்லை.

## உரை நயம்

சொல்லின் இலக்கணங்களைத் தெளிவுபெற விளக்குவதில் இவர் மிகவல்லுநர். ஒரு பொருளை எவ்வளவு தூரம் விரித்து விளக்கலாமோ அவ்வளவு தூரமும் விரித்துவர். விளக்குவர். வடமொழிப் போக்கையும் இவர் அடியொற்றியிருக்கின்றார். இவருரையுள், அகநானூறு, ஆசாரக்கோவை, ஐங்குறுநூறு, ஐந்திணை ஐம்பது, கலித்தொகை, களவழி நாற்பது, திருக்குறள், குறுந்தொகை, சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, நற்றிணை, நாலடியார், பதிற்றுப்பத்து, புறநானூறு, தொல்காப்பியம் முதலிய நூல்களிலேயிருந்து மேற்கோள் காட்டியுள்ளார்.

## உரைப்போக்கு

உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
யஃறிணை யென்மனா ரவல பிறவே
யாயிரு திணையினிசைக்குமன சொல்லே

..........................................................................

இதன்பொருள்: மக்களென்று கருதப்படும் பொருளை ஆசிரியர் உயர்திணையென்று சொல்லுவர்; மக்களென்று கருதப்படாத பிறபொருளை அஃறிணை யென்று சொல்லுவர்; அவ்விருதிணை மேலுஞ் சொற்கணிகழும் என்றவாறு.

எனவே, உயர்திணைச் சொல்லும் அஃறிணைச் சொல்லுமெனச் சொல்லிரண்டென்றவாறும்.

மக்கட்சாதி சிறந்தமையான் 'உயர்திணை' யென்றார்.

என்மனாரென்பது செய்யுண்முடிபெய்தி நின்ற தோராரீற் றெதிர்கால முற்றுச்சொல். என்றிசினோர், கண்டிசினோர் என்பன முதலாயின அவ்வாறு வந்த இறந்தகால முற்றுச்சொல். என்ப என்னும் முற்றுச் சொல்லினது பகரங் குறைந்து மன்னும் ஆருமென இரண்டிடைச் சொற்பெய்து விரித்தாரென்று உரையாசிரியர் கூறினராலெனின்;—என்மனாரென்பது இடர்ப்பட்டுழிச் சிறுபான்மை வாராது, நூலுள்ளுஞ் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்று வருதலானும் இசைநிறையென்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார் பின்னும் இசைநிறையென்றல் மேற்கோண் மலைவாதலானும், அவர்க்கது கருத்தன்றென்க. மாணாக்கர்க் குணர்வுபெருகல் வேண்டி வெளிப்படக்கூறாது உய்த்துணரவைத்தல் அவர்க்கியல்பாகலாற் செய்யுண் முடிபென்பது கூறாராயினர்.

என்மனா ராசிரியரெனவே, உயர்திணை அஃறிணையென்பன தொல்லாசிரியர் குறியாம். ஆசிரியரென்னும் பெயர் வெளிப்படாது நின்றது.

மக்களாகிய சுட்டு யாதன் கணிகழும் அது மக்கட் சுட்டெனப் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஈண்டுமக்களென்றது மக்களென்னுமுணர்வை. எனவே, மக்களேயாயினும் மக்களென்று சுட்டாது பொருளென்று சுட்டியவழி உயர்திணையெனப் படாதென்பதாம்.

........................................................................................................

---

## ௩. நச்சினார்க்கினியர்

### பெயர்

"கச்சைசேரரவர் போலும் கறையணிமிடறர் போலும்,
பிச்சைகொண்டுண்பர் போலும் பேரருளாளர் போலும்,
இச்சையால் மலர்கள்தூவி இரவொடு பகலுந்தம்மை,
நச்சுவார்க் கினியர் போலும் நாகவீச்சரவனாரே."

என்பது திருநாகேச்சுரத் தேவாரம். 'நச்சினார்க்கினியன்' என்பது முழுமுதற் கடவுளுக்கு ஒரு பெயரென்று துணியலாம். உலகிலுள்ள உயிர்த்தொகைகளெல்லாமே நச்சுவார்க்கும் நச்சினார்க்கும் இனியவைகள்தாம். அவ்விதமாக மாபெருங்கடவுளாய் உலக முதல்வனாய்த் திகழும் இறைவன், நச்சுவார்க்கும் நச்சினார்க்கும் இனியனாகாமற்போதலெவ்விதம் சாலும்? நச்சுவார் + எதிர்காலம். நச்சினார் + இறந்த காலம். நச்சுதல்— விரும்புதல்.

" எவ்வுலகும் வாயிலையைந் தமுதவா
யுடையனென இயம்பப்பெற்றோன்
எவன்பண்டைப் பனுவல்பல
இறவாது நிலவவுரை எழுதிவைத்தோன்
எவன்பரம வுபகாரி எவன்
நச்சினார்க்கினிய னெனும்பேராளன்
அவன்பாத இருபோதும் எப்போதும்
மலர்கவென் னகத்துமன்னோ

என ஆன்றோர்களாற் போற்றப் பெற்றவரும், "உச்சிமேற் புலவர்கொள்" என்று சிறப்புச்

சொற்பெற்றவருமாகிய, 'மதுரையாசிரியர் பாரத்து வாசி' நச்சினார்க்கினியரென்னும் பேருரையாசிரியரது பெயர் இடுகுறிப் பெயரென்றே எண்ண வேண்டியதாக விருக்கின்றது.

### இடம்

இவர் வசித்திருந்த இடம் மதுரை

### காலம்

ஏறக்குறைய ஆயிரத்து இருநூற்றைம்பது வருடங்களே.

### குலம்

குலம் பார்ப்பனர்குலம். கோத்திரம் பாரத்து வாச கோத்திரம்.

### சமயம்

இவரது சமயம் சைவசமயமே; இவ்வுண்மை கள்.

"வண்டிமிர் சோலை மதுரா புரிதனில்
எண்டிசை விளங்க வந்த ஆசான்
பயின்ற கேள்வி பாரத்து வாசன்
நான்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞானம் நிறைந்த சிவச்சுடர்
தானேயாகிய தன்மை யாளன்"

என்னும் உரைச் சிறப்புப்பாயிரத்தால் பெறப் படும். இவர் முன்னர் சமணராகவிருந்து பின் னர் சைவசமயத்தைத் தழுவினர் என்று சிலர் கூறுகின்றனர். அதற்குத் தக்க ஆதாரம் இருப்ப தாகத் தெரியவில்லை.

## வாழ்க்கைவரலாறு

இவர் இளம்பூரணரிடத்தில் இலக்கண இலக்கியங்களையெல்லாம் இளமைக்காலத்திலேயே கற்று அவைகளிலெல்லாம் மிகவல்லவரானார். இவர் காலத்தில் பல சங்கநூல்கள் உரையியற்றப்பெறாமலிருந்தன. உரையில்லாத நூல்கட்கெல்லாம் உரையியற்றுவதையே இவர் தம் தொழிலாகக் கொண்டார். இவர் தம்முரையில் மதுரையாசிரியரைப் "பேராசிரியரென்றும், இளம்பூரணரை உரையாசிரியர்" என்றுங் குறிப்பிட்டுள்ளார். இவர் திருக்குறளுக்கு ஓர் உரை யெழுதியதாகவும், அவ்வுரையிற் சில விடங்களில் தவறியதாகவும், அக்காலை இளைஞராயிருந்த பரிமேலழகர் தாமெழுதிய உரையில் இவர் உரையைப் பல விடங்களிலும் கண்டித்து எழுதியுள்ளனர் எனவும் கேள்விப்பட்ட இவர், தமது பெருமையையும் அகவை முதிர்ச்சியையும் சிறிதும் பொருட்படுத்தாது, காஞ்சியிலிருந்த பரிமேலழகரிடஞ்சென்று, அவ்வுரையை வாங்கிப் பார்த்துத் தாம் ஐயப்பட்டு இடர்ப்பாடுற்ற விடங்கட்கெல்லாம், பரிமேலழகர் உண்மையான செம்பொருளுரைத் திருத்தலைக்கண்டு வியந்து, போற்றிக் கொண்டாடினரெனவும் ஒரு வரலாறு காணப்பெறுகின்றது. ஆயினும் அதனை வலியுறுத்தற்குத் தக்க ஆதாரம் யாதுமின்று. ஆயினும் இவர் திருக்குறளுக்கும் உரையெழுதிய உண்மை;

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமேல் அழகர் பருதி—திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லை உரையெழுதி னோர்."

என்னும் வெண்பாவால் அறியக்கிடக்கின்றது. நச்சர் என்பது நச்சினார்க்கினியரன்று என்பாரும் உளர்.

இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரையெழுதியிருக்கின்றார். உரையாசிரியராகிய இளம்பூரணர் சேனாவரையர் முதலிய எல்லோருக்கும் இவர் பிற்பட்ட காலத்தினராதலின், அவர்களுடைய உரைகளிலெல்லாம் பொருந்தாவென்று தம்முள்ளத்திற்குப் பட்டவற்றைச் சிறிதுந் தயங்காமலும் நேர்மை தவறாமலும் இவர் கண்டித்துள்ளார்.

எல்லாருடைய உரைகட்கும் இவருரை பின்னெழுந்தமையின் இவர் உரை மிகப் போற்றப்பெறும். இவர் தொல்காப்பியத்திற்கும், அறுமுகக் கடவுளை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய திருமுருகாற்றுப் படைக்கும், சோழன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடிய பொருநராற்றுப் படைக்கும், ஏறுமா நாட்டு நல்லியக் கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப் படைக்கும், தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய பெரும் பாணாற்றுப்படைக்கும், நப்பூதனார் பாடிய முல்லைப் பாட்டிற்கும், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடிமருதனார் பாடிய மதுரைக் காஞ்சிக்கும், பாண்டியன் நெடுஞ் செழியனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய நெடுநல்வாடைக்கும், ஆரியவரசன் பிரகதத்தனைக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டிற்கும், சோழன் கரிகாற் பெருவளத்தானைக்

கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப் பாலைக்கும், பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னனை இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்க் கௌசிகனார் பாடிய கூத்தராற்றுப்படை என்னும் மலைபடுகடாத்துக் கும், கலித்தொகைக்கும், குறுந்தொகையிற் பேரா சிரியர் எழுதாதுவிட்ட இருபது பாட்டிற்கும், திருத் தக்க தேவர் செய்த சீவகசிந்தாமணிக்கும் உரை யெழுதியிருக்கின்றார். இவ்வுண்மைகள்;

"தொல்காப் பியத்தில் தொகுத்த பொருளனைத்தும்
எல்லார்க்கும் ஒப்ப இனிதுரைத்தான்—சொல்லார்
மதுரைநச்சி னார்க்கினியன் மாமறையோன் கல்விக்
கதிரின் சுடரெறிப்பக் கண்டு".

"பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்கும்—சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே"

என்னும் வெண்பாவால் நன்கு விளங்குகின்றன.

சீவகசிந்தாமணிக்கு இவர் முதன்முறை ஒருரை யெழுதி, அதனை அக்காலத்தில் மேன்மையுடன் விளங்கிய சைனப் புலவர்கள் பலருக்குங்காட்ட அவர்கள் அவ்வுரையை ஒப்புக்கொள்ள மறுத்து விட்டனராம். பின்னர் ஆருகத நூல்கள் பல வற்றையு மாராய்ந்து, இரண்டாமுறையோருரையை எழுதி அவர்களுக்குக்காட்ட அவர்கள் அவ்வுரை

யைப் பார்த்து வியந்து மகிழ்ந்து ஏற்றுக்கொண்டனராம்.

நாமகளிலம்பகத்தில் "கண்ணுளார் நுங்காதலர்" என்னும் நாற்பத்து மூன்றாஞ் செய்யுளுரையில் "ஏங்குத் தன்மையை யுணர்த்துதல்" "செலவினும் வரவினும்" 'என்னுஞ்சூத்திரத்திற் கூறினும்' என்றும், குணமாலையாரிலம்பகத்தில் "மங்கை நல்லவர்" என்னுஞ் செய்யுளுரையில், ஆசிரியர் "நண்டுந்தும்பியும்" என்று தும்பியைப்பின் வைத்தது, மேல்வருஞ்சூத்திரத்தின் "மாவு மக்களுமை யறிவென்ப" என்ற ஐயறிவு இதற்கும் ஏறுதற் கென்றுணர்க; இதனை வாராததனால் வந்தது முடித்தலென்னுந் தந்திரவுத்தியாற் கொள்க வென்று ஆண்டு உரை கூறிப்போந்தாம்." என்றும் எழுதியிருத்தலால் இவர் தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய பின்பு, சீவக சிந்தாமணிக்கு உரையெழுதினரென்பது பெறப்படும்.

தொல்காப்பியவுரை முதலியவற்றில், வேதாந்தம், வேதாங்கம் முதலிய நூல்களில் இருந்தும் பல செய்திகளை யெடுத்துக் காட்டுகின்றமையின், இவர் வடமொழியிலும் வல்லவராதல் கூடுமென்றுஞ் சிலர் எண்ணுகின்றனர். இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர் முதலிய பல உரையாசிரியர்களும் இவருரையிற் கூறப்பெறுகின்றமையின் இவர் அவர்களனைவருக்கும் பிற்பட்டவரென்பது பெறப்படுகின்றது. இவருடைய சிறப்பினைவியந்து அக்காலத்தார் பாராட்டிப் பாடிய பாடல்கள் சில வருமாறு:

## நேரிசையாசிரியப்பா

பாற்கடல் போலப் பரந்த நன்னெறி
நூற்படு வான்பொருள் நுண்ணிதின் உணர்ந்த
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தின்
நாற்பொருள் பொதிந்த தூக்கமை யாப்பினைத்
தேக்கிய சிந்தைய ராகிப் பாற்பட
எழுத்தும் சொல்லும் பொருளும்இம் மூன்றும்
இழுக்கற ஆய்ந்த வழுக்கில்தொல் சீர்த்தித்
தொல்காப் பியமெனுந் தொடுகடற் பரப்பை
மறுவும் குறைவும் இன்றி யென்றும்
கலையின் நிறைந்த கதிர்மதி என்ன
நிலையுடைக் கலத்தின் நெடுங்கரை காணக்
கல்லா மாந்தர் கற்பது வேண்டியும்
நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியும்
உரையிடை இட்ட காண்டிகை உரைத்தும்
ஆன்றோர் புகழ்ந்த அறிவினில் தெரிந்து
சான்றோர் உரைத்த தண்தமிழ்த் தெரியல்
ஒருபது பாட்டும் உணர்பவர்க் கெல்லாம்
உரையற முழுதும் புரைபட உரைத்து
ஒலித்திரைத் தலத்தின் உணர்ந்தோர் உரைக்கும்
கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்
குள்ளுறை உவமமும் ஏனை உவமமும்
தெள்ளிதில் தெரிந்து இணைப்பொருட் கேற்ப
உள்ளுறை உவமத் தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி
இறைச்சிப் பொருளுக் கெய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினைமுடித்துக் காட்டிப்
பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்

பாற்பட நூலின் யாப்புற உரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற இன்னுரை பொருள்பெற விளம்பியும்
வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தெண்கடல் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது வென்னப்
பருப்பொருள் கடிந்து பொருட்டொடர்ப் படுத்து
வினையொடு முடியப் புனையுரை யுரைத்தும்
கல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியும் காட்சியும் காசினி யறியப்
பொருள்தெரி குறுந்தொகை இருபது பாட்டிற்
இதுபொருள் என்றவன் எழுதா தொழிய
இதுபொருள் என்றதற் கேற்ப வுரைத்தும்
தண் தமிழ் தெரித்த வண்புகழ் மறையோன்
வண்டிமிர் சோலை மதுரா புரிதனில்
எண்டிசை விளங்க வந்த ஆசான்
பயின்ற கேள்விப் பாரத் துவாசன்
நான்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞானம் நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாளன்
நவின்ற வாய்மை நச்சினார்க் கினியன்
இருவினை கடியும் அருவியம் பொதியின்
மருவிய குறுமுனி தெரிதமிழ் விளங்க
ஊழி ஊழி காலம்
வாழி வாழிஇம் மண்மிசை தானே.

விருத்தம்

பச்சைமா லனைய மேகம் பௌவநீர் பருகிக்கான்ற
எச்சில்நாற் றிசையும்உண்ணும் அமிழ்தென எழுநா
[மிச்சில்
மெச்சிகொள் நாளும் விண்ணோர் மிசைகுவர் வேதபோத
நச்சினார்க் கினியன் எச்சில் நறுந்தமிழ் நுகர்வர்
[நல்லோர்

சிவதலங்களில் சிறந்த தாகிய சிதம்பரத்தினது திருப்பெயர்களாகிய 'திருச்சிற்றம்பலம்' 'பெரும் பற்றப் புலியூர்' என்பவற்றை முறையே ஆறெழுத் தொரு மொழிக்கும் ஏழெழுத்தொரு மொழிக்கும் மேற்கோளாகத் தொல்காப்பியத்து எழுத்ததிகார மொழி மரபில் "ஓரெழுத்தொருமொழி" என்னுஞ் சூத்திரத்து விருத்தியுரையில் காட்டியிருத்தலாலும், சைவசமயத்திற்கு மிகச்சிறந்த நூல்களாகிய திரு வாசகம் திருச்சிற்றம்பலக் கோவையார் என்பவற் றில் நின்றும், இவர் தமது உரைகளிற் பலவிடங் களில் இலக்கிய இலக்கணப் பொருளுக்கேயன்றித் தத்துவப் பொருளுக்கும் மேற்கோள்கள் எடுத்து ஆண்டுள்ளதனாலும், மற்றும் இவரது உரையின் போக்காலும் இவருடைய சைவ சமயப் பற்றை நன்கறியலாம்.

எல்லாவற்றையும்விட இவருடைய தமிழ் மொழிப் பற்றுப் பெரிதும் போற்றத் தக்கது. இவர் தமது வாணாள் முற்றையுமே தமிழ் மொழிக்குப் பயன் படுத்தியவர். சிந்தாமணி, தொல்காப்பியம், பத்துப் பாட்டுப்போன்ற பெரும் நூல்கட்கு உரை யெழுதுவதெனின் எவ்வளவு காலக்கழிவுந் தொல்

லையுமேற் படுமென்பதைக் கூறவும் வேண்டுமோ? இவருடைய தமிழ்மொழித் தொண்டு பெரிதும் போற்றத்தக்கது.

## உரை நயம்

இவருடைய உரைகள் திருத்தமான நடையில் பொருத்தமான போக்கில் வழுவற விரித்து எழுதப் பெற்றுள்ளன. பலவிடங்களில் சொல் லழகு மிகுந்து தோன்றுவதைக் காணலாம். விரிக்கவேண்டிய விடங்களில் எவ்வளவு கூடுமோ அவ்வளவும் விரித்தே எழுதுவர். பிறருடைய உரைகளை மறுத்தெழுதுமிடத்துத் தெளிவான காரணங்காட்டாது மறுக்கமாட்டார். பொருள் விளங்காத பலமொழிகளின் பொருளை அறிவதற்கு இவருடையவுரை ஓரரிய திறவுகோலாகும். ஒவ் வொரு நூலுக்கும் வருந்தியுழைத்தே யுரையை யெழுதியிருக்கிறாரன்றி மனம்போனபடி எந்நூலுக் கும் எழுதினாரில்லை. தாமெழுதுபவற்றிற்குத் தக்க மேற்கோளும் இவர் எடுத்துக்காட்டுவார். எடுத்துக் காட்டுகளை நன்முறையிலெடுத்துக் காட்டுவதிலும் இவர் மிகவல்லுநர். இவரெழுதிய தொல்காப்பிய வுரை இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர் முதலிய எல்லாருடைய வுரைகட்கும் பிற்பட் டெழுந்து, அவைகளிற் பொருந்தாத கூற்றுக்களை யெல்லாம் கண்டித்துக்கொண்டு செல்லுதலின் மிகச் சிறந்ததாக அறிஞர்களால் எண்ணப்பெறு கிறது. இவர் கலித்தொகைக்கு எழுதியுள்ள வுரை மிகவும் போற்றக்கூடிய அருமையும் பெருமையும் அமைந்தது.

## உரைப்போக்கு

உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனா ரவரல பிறவே
யாயிரு திணையி னிசைக்குமன் சொல்லே

என்பது சூத்திரம். மேற் பாயிரத்துள் "எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடி" என நிறுத்த முறை யானே எழுத்து உணர்த்திச் சொல் உணர்த்துகின் றாராதலிற் சொல்லதிகாரமென்னும் பெயர்த்து. அது சொல்லை உணர்த்திய முறைமையெனவிரியும்.

சொல்லென்றது எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப் பொருட்டன்மையும் ஒருவன் உணர் தற்கும் கருவியாம் ஓசையை. ஈண்டு ஆக்கப்படுத லென்றது ஒருசொற் கூறுமிடத்து ஓரெழுத்துப் போக முடியும் எழுத்தெல்லாஞ் சேரக் கூறலாகா மையின் அவ்வெழுத்துக்கள் கூறிய அடைவே போயிற்றேனுங் கேட்டோர்கருத்தின்கண் ஒரு தொடராய் நிலைபெற்று நின்றுபொருளை அறிவு றுத்தலை. ஆயின் ஓரெழுத் தொருமொழிக்கு ஆக்குத லின்றாலெனின், ஓரெழுத்தொருமொழி யைக் கூறியக்கால் அதுவுஞ் செவிப்புலனாய்க் கருத் தின்கண் நிகழ்ந்து பின்னர்ப் பொருளை ஆக்குத லின் அதுவும் ஆக்குந்தன்மை யுடையதாயிற்று.

இருதிணைப் பொருளுமாவன ஐம்பொருளின் பகுதியாகிய காட்சிப்பொருளுமாவன ஐம்பாற் பொருளின் பகுதியாகிய காட்சிப்பொருளுங் கருத் துப் பொருளும் அவற்றின் பகுதியாகிய ஐம்பெரும் பூதமும் அவற்றின் பகுதியாகிய இயங்கு திணையும்

நிலைத் திணையுமாம். இவையெல்லாம் ஐம்பாலாய் அடங்கின.

இனிப் பொருட்டன்மையாவது மக்கட்டன்மையும் இயங்குதிணைத் தன்மையும் நிலைத்திணைத் தன்மையுமாம். இத்தன்மை ஒருபொருட்குக் கேடு பிறந்தாலுந் தனக்குக் கேடின்றித் தான் ஒன்றேயாய்ப் பலவகைப்பட்ட பொருடோறும் நிற்குமென்று உணர்க.

கருவியாவது அப்பொருட்டன்மையை ஒருவன் உணர்தற்கு அவ்வோசை கருவியாய் நிற்றல்; இதனை ஐம்பொறிகள் ஒருவன் பொருளை உணர்தற்குக் கருவியாய் நின்றாற்போலக் கருவியாய் நிற்குமென்று உணர்க.

இனி ஓசையைச் சொல்லென்றீரேற், கடலொலி சங்கொலி வின்னொலி முதலியனவுஞ் சொல்லாகாவோ வெனின், சொல்லு இது முன்பு யான் உணர்ந்த எழுத்தென்றே பின்பு கூறியக்காலும் உணர நிற்றலிற் கேடின்றி நிலைபேறுடையதாயிற்று. இவை அங்ஙனம் உணர்தலாற்றாமையானும் எழுத்தினான் ஆக்கப்படாமையானும் நிலைபேறிலவாயின; ஆதலிற் சொல்லெனப்படா. அன்றியும் ஓசை அரவம் இசையென்பன எழுத்தினான் ஆகிய ஓசையை உணர்த்தும். முற்கு வீளை முதலியன எழுத்தினான் ஆக்கப்படாமையிற் சொல்லாகா.

## எ. பரிமேலழகர்

### பெயர்

இவருடைய பெயரும் காரணப்பெயரா அன்றி இடுகுறிப்பெயரா என்னும் ஐயப்பாட்டிற்குத் தப்பிப் பிழைத்ததன்று. 'பரிமேலழகர்' என்பது திருமாலுக் கொரு பெயரென்றும் அது வைணவ சமயத்தைச் சேர்ந்த இவருக்குச் சமய நாட்டம் பற்றி யிடுகுறியாக விடப்பட்டதென்று சிலரும், இவர் தம் முரையின் பெருமை விளங்கப் பழுக்கக் காய்ச்சிய வெண்கலப் பரிமேலிருந்தமையின் இப்பெயரைக் காரணப்பெயராக இடப்பெற்றன ரென்று சிலரும் விளம்புப.

### இடம்

"வள்ளல் சிலைப்பெரு மாணச்சர் சாத்தர் வழுதிமுதற்
றள்ளுவ னார்க்குந் தலையான பேரையுந் தன்னுரையை
விள்ளுவ னார்க்குந் திருக்காஞ்சி வாழ்பரி மேலழகன்
வள்ளுவ னார்க்கு வழிகாட்டி னன்தொண்டை மண்ட
[லமே,"

என்பது தொண்டைமண்டல சதகம். இச்செய்யுளில் பரிமேலழகர் தொண்டைநாட்டுத் திருக்காஞ்சியில் வாழ்ந்திருந்தவரென்று சொல்லப் பெறுகிறது. இவையெல்லாங் கட்டுக்கதை யென்றும், பரிமேலழகர் மதுரையில் வாழ்ந்திருந்தவரென்றும் மற்றொரு செய்தி வழங்குகின்றது. அறிஞர்கள் அனைவரையும் பாண்டிநாட்டின்பாற் படுத்தவேண்டுமென்பது இவர்தம் அவாவாக விருக்கலாம். எதனையும் உறுதிப்படுத்தற்குத் தக்க ஆதாரமில்லை.

குலம் சமயம்

இவர் திருமாலை வழிபடும் வைணவப் பார்ப்பனரென்பது பெரும்பாலாருடைய முடிபு.

வாழ்க்கை வரலாறு

இவர் தென்மொழி வடமொழி யிரண்டிலும் தேர்ச்சி மிக்கவர். திருவள்ளுவர் திருக்குறளுக்கு உரைகண்ட பதின்மரில் தலையாயவர். திருக்குறளுக்குப் பதின்மரெழுதிய வுரைகளையும் பார்த்து ஒப்பு நோக்கிய பேரறிஞர்களுள் ஒருவர் இவருடைய உரையை வியந்து;

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலில்
பரித்த வுரையெல்லாம் பரிமே லழகன்
தெரிந்தவுரை யாமோ தெளி."

என்று வியந்து பாராட்டிச் சிறப்புக்கவி கூறியிருக்கின்றார். இவர் தம்முடைய உரையைக் காஞ்சி நகரின்கண் அந்நாளையில் அரசுபுரிந்துகொண்டிருந்த அரசன் முன்பு பேரவை கூட்டி அரங்கேற்றஞ்செய்தனரெனவும்; இவர் தம் உரையை அரங்கேற்றஞ்செய்யத் தொடங்கிய காலை சிலர் "நும் முரை உண்மையுரையென்றற்கு ஆதாரம் என்னை? ஏதேனுந் தக்க ஆதாரங் காட்டிலன்றி நும் முரையை அரங்கேற்றஞ்செய்ய வொட்டேம்" என்று தடுக்க, அவர்களுடைய தடையை நீக்குமாறு இவர், வெண்கலத்தால் ஒரு பரி (குதிரை) செய்வித்து, அதனை நன்கு பழுக்கக் காயவைத்து, தமது வழிபடு தெய்வத்தின் திருவருளால்

பரிமேலேறி யிருந்துகொண்டு தம்முரையை அரங்கேற்றுதல் புரிந்தனரென்று ஒரு செய்தி வழங்கி வருகின்றது.

இவருடன் சமகாலத்தவராகிய நச்சினார்க்கினியர் இவரைக் காட்டினும் அகவையில் முதியவராக விளங்கினார். இவர் திருக்குறளுக்கு உரையொன்றெழுதி, அதிலே தமதுரையைச் சிற்சிலவிடங்களில் மறுத்திருக்கின்றாரென்று கேள்வியுற்ற நச்சினார்க்கினியர், பரிமேலழகரிடத்திற் சென்று அவ்வுரையைத் தமக்குக் காட்டும்படி கேட்டனர். அவ்வாறே காட்டினர். அதனை நச்சினார்க்கினியர் இரு கைகளாலுமேற்றுத் தமக்கு ஐயமாகவிருந்த பல குறள்களை யெடுத்துப் பார்த்தனர். பார்த்தபோது;

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"

என்னுந் திருக்குறளிலே, குடம்பை யென்பதற்குத் தாங் கூடென் றுரைத்திருக்கப், பரிமேலழகர் அதற்கு முட்டையென் றுரையெழுதி, கருவுந்தானு மொன்றாய்ப் பிறந்து வேறாந் துணையும் அதற் காதாரமாய் நிற்றலால் அஃதுடம்பிற் குவமையாயிற்று" என்றும்; "கூடு புள்ளுடன் றோன்றாமையானும், அதன்கண் அது மீண்டும் புகுதலுடைமையானும் உடற்பிற் குவமையாகா"தென்று மறுத்திருக்கக் கண்டு; தாம் உரைத்த உரையைக் கண்டித்தாரென்று வெகுளாமலும் நாணாமலும் "மெய்ப்பொருள் மெய்ப்பொருள்" என்று பாராட்டி உச்சிமேல் வைத்துக் கொண்டாடினரென்று சுன்ன

பரம்பரைச் செய்தி வழங்கிவருகின்றது. தருமர் முதலியோருடைய வுரைகளையுஞ் சில விடங்களில் மறுப்பர்.

பரிமேலழகர் வைணவ சமயத்தவராயினும் சைவாகமவுணர்ச்சியு முடையாரென்பது திருக்குற ளுரையி னிடையிடையே இவர் எழுதும் பொருள்க ளால் நன்கு விளங்குகின்றது. பரிமேலழகர் யோகப்பயிற்சியு முடையவரென்றும், ஒவ்வொரு சொல்லுக்குஞ் சமாதியிலிருந்தே மெய்ப்பொருள் கண்டனரென்றும், முதலில் வைணவராயிருந்து பின்னர் முருகக்கடவுளை வழிபடுந் தொண்டரா யினரென்றுஞ் செய்திகள் வழங்குகின்றன.

## உரைநயம்

இவர் உரையிலே பொருள் வன்மையும், செஞ் சொற் சிறப்பும் இலக்கணங் கூறும் அழகும், விருத்தியுரை கூறும் ஆற்றலும், மேற்கோ ளெடுத்து நிலைநாட்டும் வன்மையும் போற்றக் கூடி யன. பிறர், பல சொற்களாலன்றி விளக்க முடி யாத செய்திகளைச் சில சொற்களால் இவர் விளக் கிக் காட்டும் பேராண்மையும், வடமொழிகளைத் தென்மொழியாக்கும் ஆற்றலும், தமிழ்ச் சொற் கள் தடைப்பட்டு வட சொற்களை வாரியாளும் வறி யர்போலன்றிச் செந்தமிழ்ச் சொற் செல்வமுடை மையும் உடையவர். வேதாகமமாதி நூல்களில் வட மொழிப் புலமையும் மற்றும் பலவித நூலுணர்ச்சி யும் மிக்குடையாரென்பதும் நன்கு புலப்படுகின் றன.

இவர் வைதிக சமயவுணர்ச்சியில் இணையற்றவ ரென்பது "யாது மெய்யென நிகழு மையத்தினை யோகமுதிர்ச்சி யுடையார் தம் மநுபவத்தா னீக்கி மெய்யுணர்வார்" என்றும் "நிலமுத லுயி ரீறாகிய தத்துவங்களின் தொகுதியென வுணர்ந்து, அவற்றை நிலமுதலாகத் தத்தங் காரணங்களி லொடுக்கிக்கொண்டு சென்றால், காரணகாரியங்க ளிரண்டுமின்றி முடிவாய் நிற்பதை யுணர்தலாம்" என்றும், "தோற்றக் கேடுக ளுண்மையின் நித்த மாய், நோன்மையால் தன்னை யொன்றுங் கலத்த லன்மையிற் றூய்தாய்த், தானெல்லாவற்றையுங் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி யெஞ்ஞான்று மொருதன்மைத்து" என்றும், "துன்பங்களாவன பிறப்பு அநாதியாய் வருதலின், உயிரான் அளவின்றி யீட்டப்பட்ட வினைப்பயன்க ளுள் இறந்தவுடம்புகளான் அநுபவிக்கப் பட்டன வும், பிறந்த வுடம்புகளான் முகந்து நின்றனவு மொழியப் பின்னும் அநுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தன; அவை விளக்கின்முன் னிருள்போல ஞானயோகங்களின் முன்னர்க் கெடுதலான்" என்றும், "பரம்பொருளை யுணரப் பிறப்பறும்" என்றும் வரும் விசேடவுரைகளால் துணியப் பெறும்.

இவர் தம் முரையிலே தமக் குடன்பாடாயுள்ள உரையாசிரியர்களுடைய மதங்களை யெடுத்துக் காட் டித் தழுவுவதோடு, தமக்குடன்பாடில்லாத மதங் களையு மெடுத்துக்காட்டி யேதுக் கூறி மறுத்தலுஞ் செய்வர்.

### இவர்செய்த வுரை

திருக்குறளுக்கே யன்றிப் பரிபாடலுக்கும் இவர் உரைசெய் திருக்கின்றார்: வேறுசில நூல்களின் உரை இவருடையதென்று வழங்கி வருகின்றனவாயினும் அவைகளெல்லாம் இவருடைய உரையன்றென எளிதி லுணரலாம்.

### உரைப் போக்கு

அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.

இ-ள். அறம்பொருள் இன்பம் உயிரச்சம். அரசனாற் றெளியப்படுவா னொருவன், அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப்பொருட்டான் வரும் அச்சமுமென்னும்; நான்கின் திறந்தெரிந்து தேறப்படும் உபதை நான்கின் றிறத்தான் மனவியல் பாராய்ந்தால் பின்பு தெளியப்படும். எ-று. (உபதை-சோதனை.)

அவற்றுள் அறவுபதையாவது: புரோகிதரையும் அறவோனரையும் விட்டு, அவரால் இவ்வரசன் அறவோனன்மையின் இவனைப் போக்கி அறனுமுரிமையுமுடையா னொருவனை வைத்தற் கெண்ணினம். இதுதான் யாவர்க்கு மியைந்தது; நின்கருத்தென்னையெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது; சேனைத் தலைவனையும் அவனோடியைந்தாரையும் விட்டு, அவரான் இவ்வரசன் இவறன்மாலையனாகலின். இவனைப் போக்கிக் கொடையும் உரிமையும் உடையானொருவனை வைத்தற்கெண்ணினம், இதுதான் யாவர்க்கு மியைந்தது, நின்கருத்தென்னை யெனச் சூளுறவோடு சொல்லு

வித்தல். இன்பவுபதையாவது : தொன்று தொட்டு உரிமையொடு பயின்றுளொரு தவமுதுமகளை விட்டு, அவளால் உரிமையுள் இன்னாள் நின்னைக் கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்க வேண்டுமென்று என்னை விடுத்தாள். அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமேயன்றிப் பெரும்பொருளுங் கைகூடுமெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். அச்சவுபதையாவது : ஒரு நிமித்தத்தின் மேலிட்டு, ஓரமைச்சனால் ஏனையோரை அவனில்லின்க்ணழைப்பித்து, இவர் அறைபோவாரென்னற்குக் குழீஇயினாரென்று தான் காவல்செய்து, ஒருவன் இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச்செய்து நமக்கினியவரசனொருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கு மியைந்தது. நின் கருத்தென்னையெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இந்நான்கினுந் திரிபிலனாயவழி எதிர்காலத்துந் திரிபிலனெனக் கருதப்படும் வையாற் றெளியப்படுமென்பதாம். * இவ்வடநூற் பொருண்மையை யுட்கொண்டு இவரோதிய தறியாது பிறரெல்லாம் இதனை உயிரச்சமெனப் பாடந் திரித்துத் தமக்குத் தோன்றியவாறே யுரைத்தார்.

---

* இவ்வுபதை நான்கும் சாணக்கியரது அர்த்த சாஸ்திரம் முதற்பகுதி ௧௦ ஆம் அத்தியாயத்திற் கூறப் பட்டுள்ளன.

## அ. அடியார்க்கு நல்லார்

### பெயர்

இக்காலத்திலோ அக்காலத்திலோ பெரு வழக்கில்லாத அடியார்க்கு நல்லார் என்னும் பெயர், தன்னிடத் தன்புடையவர்க்குத் தானும் மிக நல்லவன் என்று பொருளைத் தருகின்றது. இஃது இவருக்குக் காரணமா? இடுகுறியா? என் பதைப் பற்றி யாதுந் துணிதற்கின்று. ஊரால் வரு பெயராக 'நிரம்பையர் காவலன்' என்றொரு பெயரும் இவருக்குக் காணப் பெறுகின்றது.

### இடம்

இவர் பிறந்தநாடு கொங்கு; ஊர் நிரம்பை என்பது;

"குருவை யுணர்ந்த விளங்கோ வடிகளுட் கொண்டு [சொன்ன
தருவை நிகரும் சிலப்பதி காரத் தனித்தமிழுக்
கருமை யுரைசெய் யடியார்க்கு நல்லா ரவதரித்து
வருமைப் பொழில் நிரம்பைப்பதி யுங்கொங்கு மண் [டலமே."

என்னும் பாட்டால் விளங்குகின்றது.

### குலமுஞ் சமயமும்

இவருடைய குலம் இன்னதெனற்கு ஆதார மில்லை. சமயம் சைவமாக விருக்குமென்று ஒரு வாறு ஊகிக்கலாம்.

### வாழ்க்கை வரலாறு

கொங்குநாட்டில் நிரம்பையூரில் தோன்றிய இவர் ஒரு சிற்றரசராக விருக்கலாமென்பது சில

ருடைய கொள்கை. அதற்கு, 'நிரம்பையர் காவலனே' என்று கூறப்பெற்றுள்ளதைத் தவிர வேறு தக்க ஆதாரங்கள் இல்லை. கொங்கு நாட்டில் தோன்றிய இவர், பொப்பண்ண காங்கேயர்கோன் என்பவரால் ஆதரிக்கப்பெற்று அவ்வுரையைச் செய்தாரென்று; ஒரு பாட்டுக் கூறுகின்றது.

"ஒருந் தமிழொரு மூன்று மூலகின் புறவகுத்துச்
சேரன் றெரித்த சிலப்பதி காரத்தில் சேர்ந்தபொருள்
ஆருந் தெரிய விரித்துரைத்தான் அடியார்க்கு நல்
[லான்
காருந் தருவும் அனையான் நிரம்பையர் காவலனே.

காற்றைப் பிடித்துக் கடத்திலடைத்துக் கடியபெருங்
காற்றைக் குரம்பைசெய் வார்செய்கை போலுமக் கா
[லமெனும்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர்
[கோனளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்
[வித்ததே."

'நிரம்பையர் காவலன் என்பதற்கு, நிரம்பை மன்னன் என்று பொருளாயின், அம்மன்னனுக்குப் பொப்பண்ண காங்கெயர்கோன் சோறளிக்க வேண்டிய காரியமில்லை. ஆதலின் கொங்குநாட்டு நிரம்பையூரில் தோன்றிய இவர் பொப்பண்ண காங்கேயர்கோன் என்னும் வள்ளலால் ஆதரிக்கப் பெற்றுச் சிலப்பதிகாரத்திற்கு உரைசெய்தாரென்பது தேற்றம். இவரைப்பற்றிய பிற செய்திகள் ஆராய்தற்குரியன.

## உரைநயம்

இவருடைய உரை மிகச் சிறந்தது. இவ்வுரை அந்நாளிலேயே;

"பருந்தும் நிழலுமெனப் பாட்டு மெழாலும்
பொருந்துநெறி யெல்லாப் பொருளுந்—தெரிந்திப்
படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தான் நன்னூல்
அடியார்க்கு நல்லானென் பான்."

என்று, போற்றப்பெற்றிருக்கிறது. இவ்வுரைச் சிறப்புப் பாயிரத்தினால் அடியார்க்கு நல்லாருடைய வுரை மூலத்தை எவ்வளவு அமைதியாக அடியொற்றிச் செல்லுகின்றதென்பதை நன்குணரலாம். பிறவுரையாசிரியர்களைப்போலன்றி இவர், தாம் எடுத்துக்காட்டும் மேற்கோள்கள், இன்ன இன்ன நூல்களில் உள்ளனவென்று பெரும்பாலும் விளக்கப்படுத்தியிருக்கிறார். ஐந்திணைக்குமுரிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் ஆகிய இவற்றுள் ஒவ்வொன்றின்வகை பலவற்றிற்கும் சிலப்பதிகாரத்திலிருந்தே மேற்கோள் காட்டி விளக்கியிருக்கின்றனர். சிலப்பதிகாரஞ் செய்யப்படும்போதிருந்த இசைத்தமிழ் நாடகத்தமிழ் முதலிய நூல்கள் இறந்துபோனமையின் உரையெழுதிய காலத்தில் வேறு நூல்களை மேற்கோளாகக் கொண்டனர். இந்திர விழவூரெடுத்த காதையில் "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென" என்றும்; கட்டுரைக் காதையில், "ஆடித்திங்கட் பேரிருட் பக்கத், தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று, வெள்ளி வாரத்து" என்றுஞ் சொல்லப்பட்டுள்ள காலவரையறையைக் கொண்டும், அவ்

வவ்விடத்துள்ள ஒவ்வொரு குறிப்பைக்கொண்டும் ஊகஞ்செய்து கோவலன் கண்ணகி இருவரும் இன்ன காலத்திலே காவிரிப்பூம் பட்டணத்தி லிருந்து புறப்பட்டார்களென்றும், இன்ன இன்ன காலத்திலே இன்னது இன்னது செய்தார்களென் றும் எழுதிக்கொண்டு போகிறார்.

உரைநடை சில விடங்களில் எதுகை மோனை முதலியவற்றோடு இனிமையாக அமைந்துள்ளது. நூலின் பகுதிகளைத் தனியே படிப்போர்க்கும் அப் பகுதிகள் ஆங்காங் குள்ளவைகளாலேயே விளங்க வேண்டுமென்பது இவர் நோக்கமாதலால் முன் னெழுதிய வற்றையே பின்னுமெழுதுவார். பாட் டில் யாண்டேனும் திசைச்சொற்கள் வந்திருப்பின் அவற்றைத் தனியே யெடுத்துக் காட்டி, இன்ன சொல் இன்ன நாட்டு வழக்கென்றும்; அக்காலத் தில் வழங்கிய பழமொழிகளின் கருத்து யாண்டே னும் வந்திருப்பின் அவற்றைத் தனித்தனியே எடுத்துக் காட்டி, இன்னது இன்ன பழமொழி யென்றும் புலப்படுத்துவார்.

இவர் தம்முடைய உரையில் அகத்தியம், அக நானூறு, அணியியல், இசைநுணுக்கம், இந்திர காளியம், உதயணன் கதை, ஓவியநூல், கலிங்கத் துப் பரணி, பெருங்கலித்தொகை, கலித்தொகை, களரியாவிரை, குணநூல், குருகு, குறுந்தொகை, கூத்தநூல், சயந்தம், சிந்தாமணி, சிறுபாணாற்றுப் படை, சூளாமணி, செயிற்றியம், தண்டியலங்காரம், தாளவகையோத்து, திருக்குறள், திருச்சிற்றம்பலக் கோவையார், திருமுருகாற்றுப்படை, திவாகரம்,

தொல்காப்பியம், நாலடியார், நான்மணிக்கடிகை, நூல், நெடுநல்வாடை, பஞ்சபாரதீயம், பஞ்சமரபு, பட்டினப்பாலை, பதிற்றுப்பத்து, பரதசேனாபதீயம், பாரதம், பரிபாடல், பழமொழி, பாசண்டம், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, பெருங்குருகு, பெருங்குறிஞ்சி, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மணிமேகலை, மதிவாணர் நாடகத் தமிழ்நூல், மலைபடுகடாம், மூத்தொள்ளாயிரம், முறுவல், வளையாபதி, வெண்டாளி ஆகிய நூல்களை மேற்கோளாக வெடுத்துக் காட்டியிருக்கின்றார்.

சிலப்பதிகாரத்திற்குத் தக்க வுரையைச்செய்த இப்புலவர்பிரான் பெருமிதஞ் சிறிதுமின்றி;

"எழுத்தின் திறனறிந்தோ இன்சொற் பொருளின்
அழுத்தந் தனிலொன் றறிந்தோ—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின்(று)
எழுதத் துணிவதே யான்."

என்று அவையடக்கமாக ஒரு செய்யுளுஞ் செய்துள்ளார்.

## உரைப் போக்கு

"குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக்கோச் சேரல் இளங்கோ வடிகட்கு"

அடிகளென்றது, அறத்தலான். அத்துறவின் வரலாறு யாதோவெனின்; குமரியொடு வடவிமயத், தொருமொழிவைத் துலகாண்ட, சேரலாதற்குத் திகழொளி ஞாயிற், றேழ்பரி நெடுந்தேர்ச் சோழன் றன்மக, ணற்சோணையீன்ற மக்களிருவருண், முன்னோன் றன்னைப் பின்னரியற்றிப், பின்னோன் றன்

லையும் பெருநரம் பாகென, வன்னவர் தம்மொடு தென்னர் செம்பியர், தன்னடி போற்றத் தமனிய மண்டபத்துச், சிங்கஞ் சுமந்த பொங்கணை மீமிசை, யுவரித் திரையிற் கவரி யிரட்ட, வேந்த னிருந்துழிச் சார்ந்த நிமித்திக, னடிமுதன் முடிவரை நெடிது நோக்கி, யின்றேள் கழியப் பொன்றிக ழுலகஞ், சேர்தி நீயெனச் சேரலற் குரைத்த வன், மைந்தரை நோக்கி நந்தாச் செங்கோ, லந்தமி லின்பத் தரசா ளுரிமை, யிளையோற் குண்டென வுளைவனன் வெகுண், டமுக்காற் றெழுக்கத் திழுக்கு நெஞ்சினன், கண்ணெரி தவழ வண்ணலை நோக்குங், கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச், செங்குட்டுவன்றன் செல்ல னீங்கப், பகல் செல் வாயிற் படியோர் தம்மு, னகலிடப் பார மகல நீக்கிச், சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து, அந்தமி லின்பத் தரசாள் வேந்தாயின னென்பது. இக்கதையைப் பதிற்றுப்பத்தினுள் அஞ்சாம் பத்தின் முடிவின்கண் "வடவருட்கும்" என்னும் கவியுள்ளும், வாழ்த்தின் கண்ணும், வரந்தருகாதைக் கண்ணுங் காண்க.

குணவாயில் - திருக்குணவாயி லென்பதோரூர்; அது வஞ்சியின் கீழ்த்திசைக்க ணுள்ளது. அஃது ஆகுபெயர். அது குணக்கண் வாயில் குணவாயில்; குணக்கின்கண் வாயில் குணவாயிலெனச் சாரியை பெற்றும் பெறாதும் வரினும் அமையும். என்னை? "எழனுருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச், சாரியைக் கிளவி யியற்கையுமாகும்" என்றூராகலின். வாயிற் கோட்ட மென்பது "லகாரவிறுதி னகார

வியற்றே" என்பதனால், ஏழனுருபின்கண் வந்த சாரியை லகாரவீறு, வருமொழிமுதல் வல்லெழுத்து வர னகாரம் வேற்றுமைக்கண் திரிந்து றகாரமாயிற்றே போலத் திரிந்தது. கோட்டம் - அருகன் கோயில். அது "மஃகான் புள்ளிமு னத்தே சாரியை" என்பதனால், ஏழனுருபின்கண் சாரியை பெற்று, "அத்தே வற்றே யாயிரு மொழிமே, லொற்றுமெய் கெடுத றெற்றென் றற்றே" என்பதனால் மகரங்கெட்டு, "அத்தினகர மகரமுனையில்லை" என்பதனால், அகரங்கெட்டு முடிந்தது." அவற்றுள், மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்" "குற்றியலுகரமு மற்றென மொழிப" என்பதனாலும், "புள்ளியீற்றுமு னுயிர்தனித் தியலாது, மெய்யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுத்தே" என்பதனாலும் வருமொழி அகாரவுயிரேறிற்று.

---

## ௯. மயிலைநாதர்

### பெயர்

மயிலாப்பூர் என இக்காலத்தில் வழங்கும் மயிலையில் முன்பு சினாலயம் ஒன்று இருந்ததென்றும், அதிலெழுந்தருளியிருந்த நேமி நாதருடைய திருப்பெயரே அச்சமயத்தவராகிய இவருக்குப் பிள்ளைப் பெயராக இடப் பெற்றதென்றுந் துணிகின்றனர்.

### இடம்

இவர் வசித்திருந்த இடம் இன்னதெனத் துணிதற்கிடமில்லையாயினும் தொண்டை நாட்டிலே வாழ்ந்திருந்தவரென்பதுமட்டும் நன்கு தெரிகிறது.

### சமயம்

இவர் சைன சமயத்தைச் சேர்ந்தவரென்று ஐயமறப் பெறப்படுகின்றது. இவர் தம்முடைய நன்னூலுரையில் சைனமத வழக்குகளையும், நூற் செய்யுட்களையும் எடுத்துக்காட்டுவதுடன் அருகக் கடவுளை மிகுதியும் பாராட்டி யிருத்தலால் இது தெளிவாம்.

### வாழ்க்கை வரலாறு

இவர் பிறந்து வளர்ந்தவிடம் கல்விகற்ற வரலாறு முதலிய யாதும் தெரியவில்லை. அக் காலத்தில் பயின்ற தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களினும் எட்டுத்தொகை பத்துப் பாட்டுப் பதினெண் கீழ்க்கணக்கு முதலிய சங்கநூல்களினும், ஐம்பெருங்காப்பியங்களினும் அவற்றின் உரைகளினும் இவர் பயிற்சிமிக்குடையாரென்பது இவருடைய நன்னூல் உரையால் நன்கு விளக்கமாம். இவர்தான் நன்னூலுக்கு முதன்முதலாக வுரையியற்றியவரெனக் கூறப்பெறுகிறாராயினும் இவருடைய உரையிலே, "உரைப்பாருமுளர்" "கூறுவாருமுளர்" என்றெழுதியுள்ளமைகொண்டு இவருரைக்கு முன்னும் உரையிருந்திருக்கின்றதென்றுஞ் சிலர் எண்ணுகின்றனர்.

### உரை நயம்

நன்கு விளங்குபவைகட்கு உரையெழுதாமல் விட்டு விடுதலும், அரியவற்றிற்கு விரிவாக எழுதுவதும் இவருக்கியல்பு.

இவருரையில் அக்கால வழக்குகள் சிலவும், நூலாசிரியர் உரையாசிரியர்கள் பெயர்கள் சிலவும் நூற்பெயர்கள் சிலவுங் காணப்பெறுகின்றன. நன்னூலுக்கு இவரெழுதியுள்ள உரை "மயிலைநாதருரை" என்று வழங்குகின்றது. நன்னூலுக்கு இவரெழுதியுள்ள வுரையைவிடப் பழமையானவுரை கிடைத்திலது.

"மிகத்தெளி கேள்வி யகத்தியனார்," "ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார்," "அளவறு புலமை யவிநயனார்," "உளங்கூர் கேள்வியிளம்பூரணர்" என்பன வாதியாய பல சொற்றொடர்களால் நூலாசிரியர்களையும் உரையாசிரியர்களையும் இவர் புகழ்ந்தோதியுள்ளார். பிற்காலத்தார் சிலர் இவருடைய உரையிலே தவறு காண்பாருமாயினர். நன்னூலுரையைத்தவிர வேறு உரைகளோ நூல்களோ இவர் பெயரால் வெளிவரவில்லை.

### உரைப்போக்கு

ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்று
இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.

(எ-ன்,) சொல்லின் கூறுபாடும் அதனியல்பும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) ஒருமொழியும் தொடர்மொழியும் பொதுமொழியுமென்னும் இக்கூற்றினதாகி இருதிணையையும், அவற்றினது கூறுபாட்டான் வரும் ஐம்பாற் பொருளையும் தன்னையும் மூன்றிடத்தினும்

வழக்கின் கண்ணும் செய்யுளின் கண்ணும் வெளிப் படையானும் குறிப்பானும் விளக்குவது சொல்லா வது எ-று.

எனவே உலகத்து, உயிர்ப்பொருள், உயிரில் பொருள், இயங்கியற் பொருள், நிலையியற்பொருள், காட்சிப் பொருள், கருத்துப் பொருள், முதற் பொருள், சினைப் பொருள், இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள், வழக்குப் பொருள், செய்யுட் பொருளென்று இவ்வாறு பகுத்துரைக்கப்படும் பொருள்களெல்லாம் இருதிணை ஐம்பாலாய் அடங்குமென்பதூஉம், இவற்றைச் சொல்லுஞ் சொல்லும், ஒரு மொழி தொடர் மொழி பொது மொழியெனவும், உயர்திணைச் சொல், அஃறிணைச் சொல், ஆண்பாற் சொல், பெண்பாற் சொல், பலர் பாற் சொல், ஒன்றறி சொல், பலவறி சொல், தன்மைச் சொல், முன்னிலைச் சொல், படர்க்கைச் சொல், வழக்குச் சொல், செய்யுட் சொல், வெளிப் படைச் சொல், குறிப்புச் சொல்லெனவும் வருங் கூறுபாட்டதாமென்பதூஉ மாயிற்று. இன்னும் இதனானே, மேல் எழுத்ததிகாரத்துள் அணுத்திரள் முதற்காரணமாகப் பிறந்துமொழிக்கு முதற்காரண மாகிவந்த பலவொலி எழுத்தாமென்றும், அது தனியே நின்றும் தொடர்ந்து நின்றும் பொருளைத் தோற்றுவித்தவிற் பதமாமென்றும் போதந்தார்; ஈண்டும் அப்பதம் பகுபகுதியும், அவை தோற்று விக்கும் பொருள் இவையென்பதூஉம் சொன்ன வாறுமாயிற்று. ஆகவே எழுத்தொடு சொற் றொடர்ச்சியும் அதிகாரத் தொடர்ச்சியும் தாமே

விளங்கினவெனக்கொள்க. அவ்வகையில் நோக்க ஆரியத்திற் போல வேறு எழுத்ததி காரமென்று பிரிக்க வேண்டாமையும் போதரும். இதுதொகைச் சூத்திரமாதலின் இதன் பொருள் வகையெல்லாம் தத்தம் வகைச்சூத்திரத்தான் அறிந்துகொள்க. "கடியென்கிளவி" "கழுமென்கிளவி" "புணிறென் கிளவி" எனச்சொல் தன்னைத்தான் விளக்கின வாறு. உயிருணர்வுகள் தம்மையும் பொருளையும் உணர்த்துமாறு போலச் சொல்லும் தன்னையும் பொருளையும் உணர்த்துமெனக்கொள்க. "வயிர வூசியு மயன்வினையிரும்புஞ், செயிரறு பொன்னைச் செம்மைசெய்யாணியுந், தமக்கமை கருவியுந்தாமா மவைபோ, லுரைத்திற முணர்த்தலு முரையது தொழிலே" என்றார் ஆசிரியர் அகத்தியனாருமெனக் கொள்க சொல் பொருளை யுணர்வார்க்குக் கருவி யாவதன்றித் தானுக நின்று பொருளுணர்த்தா தென்க.

---

## ௧௦. மயிலேறும் பெருமாள் பிள்ளை

### பெயர்

மயிலேறும் பெருமாள் என்பது அறுமுகக் கடவுளின் திருப்பெயர்களுள் ஒன்று. இப்பெயர் இவருடைய இருமுது குரவர்களாலிவருக்கிடு குறிப் பெயராக இடப்பெற்றது.

### இடம்

பாண்டி நாட்டில் திருநெல்வேலியே இவருடைய பிறப்பிடமும் இருப்பிடமும் ஆகும்.

### காலம்

இவர் ஆயிரத்தெழுநூறும் ஆண்டுக்கும் ஆயிரத்தெண்ணூறும் ஆண்டிற்கும் இடையில் வாழ்ந்திருந்தவர்.

### குலம்

இவருடைய குலம் வேளாளர் குலம்.

### சமயம்

சைவ சமயம்.

### வாழ்க்கை வரலாறு

தாண்டவ மூர்த்திப் பிள்ளை யென்பவருக்கு மகனாகத் தோன்றிய இவர் கல்வி கேள்வி யொழுக்கங்களிற் சிறந்து விளங்கினர். அடியார் மாட்டன்பு செலுத்துவதினும் பெரிதும் ஈடுபட்டவர். செல்வக் குடும்பத்திற் றோன்றியவராகலின் வாழ்க்கைக் கவலை யாதுமற்றவராக இனிது நிலவிநின்றார். சைவ சித்தாந்தத்திலே மனப்பற்று மிகுதியுமுடையவர். திருவாவடுதுறையாதீனத்திற்கு அடிக்கடி செல்வதும் அவ்வாதீனத் தலைவரோடு அளவளாவி உடனுறைவதும் இவருக்கு நிலைபெற்ற குணங்களாக விருந்தன.

இலக்கணக் கொத்துச் செய்த சாமிநாத தேசிகர் முதலியோர்கட்கும் ஆசிரியர் இவரே யென்பது;

திருநெல் வேலி எனுஞ்சிவ புரத்தன்  
தாண்டவ மூர்த்தி தந்தசெந் தமிழ்க்கடல்  
வாழ்மயி லேறும் பெருமாண் மதிபதி  
இருபத கமலமென் தலைமேற் கொண்டு  
இலக்கணக் கொத்தெனும் நூலியம் புவனே.

என்று சாமிநாத தேசிகர் தமது இலக்கணக் கொத்தியியம்புவதால் பெறப்படுகின்றது. சாமிநாத தேசிகர் திருவாவடுதுறையி லிருந்தகாலே, அங்கு சென்ற இவர் அவரை யழைத்துச்சென்று நன்கு கல்வி கற்பித்து நல்ல அறிவாளியாகச் செய்தார்.

### இலக்கண இலக்கியப் பயிற்சி

இவர் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களினும் மற்றுஞ் சங்க விலக்கியங்களினும் நன்கு தேர்ச்சிபெற்றவரென்பது இவருடைய உரையால் நன்குபெறப்படும்.

### சமகாலத்தாசிரியர்கள்

பிரயோக விவேகமியற்றிய திருக்குருகூர் சுப்பிரமணிய தீட்சிதர், சாமிநாத தேசிகர் முதலியோர் இவர் காலத்தினராவர்.

### இவர் செய்தவுரை

கல்லாடர் என்னும் புலவர் பெருமானல் இயற்றப்பெற்றதும், திருவாதவூரடிகளின் திருக்கோவையாரின் நூறுபாக்களினடியாகத் தோன்றியதும் பெரிதும் கற்றார்க்கேயன்றி மற்றோர்க்குச் சிறிதும் விளங்காதிருந்ததும், 'கல்லாடம் படித்தவனோடு சொல்லாடாதே' என்னும் மொழிக்கு ஏதுவானதும் மதுரைக் கடவுளால் மனமுவந்து கேட்கப்பெற்ற சீர்த்தியுடையதுமாகிய கல்லாடநூலின் முதல் முப்பத்தேழு பாடல்கட்கு இவர் அரிய உரை எழுதியுள்ளார். பிறபாடல்கள் முடிவதற்குள் இவருக்குத் திருவடிப்பேறு கிட்டிவிட்டது. இவ்வுரையைத் தவிர வேறு நூல்கட்கு உரையோ அல்லது நூலோ இவர் செய்ததாகத் தெரியவில்லை.

## உரைப்போக்கு

அமுதமுந் தருவும் பணிவரப் படைத்த
உடலக் கண்ண னுலகுகவர்ந் துண்ட
களவுடை நெடுஞ்சூர்க் கிளைகளம் விட்டொளித்த
அருணிறைந் தமைந்த கல்விய ருளமெனத்
தேக்கிய தேனுட னிறான் மதி கிடக்கும்
எழுமலை பொடித்த கதிரிலை நெடுவேல்
வள்ளிதுணைக் கேள்வன் புள்ளுடன் மகிழ்ந்த
கறங்குகா லருவிப் பரங்குன் றுடுத்த
பொன்னகர்க் கூடற் சென்னியம் பிறையோன்

(ப-ரை.) அமுதமும் - அமிழ்தமும், தருவும் - கற்பகத்தருவும், பணிவர - முன் தாழ்தலுண்டாகையால், படைத்த-பின் படைக்கப்பட்ட, உடல் அக்கண்ணன் — இந்திரனது, உலகு - உலகத்தை, கவர்ந்து உண்ட - கவர்ந்துண்டற் கேதுவாகிய, நெடு-பெரிய, களவு உடை—களவினையுடைய, சூர்-சூரனது, கிளை - தம்பி, களம் விட்டு ஒளித்த—போர்க்களத்தைவிட்டு மறைந்த, அருள் நிறைந்து அமைந்த-கருணை நிறைந் தொடுங்குதற்குக் காரணமாகிய, கல்வியர் - கல்வியை யுடையாரது, உள்ளம் என—மனம் அக்கல்வியால் தேக்கியது போல, தேக்கிய தேனுடன் - நிறைந்த தேனோடு, இறால் - தேன்கூடானது, மதிகிடக்கும்-மதிபோற் கிடக்கிற, எழுமலை - எழுமலையை, பொடித்த - தூளாக்கின, கதிர் - ஒளியையுடைய, இலை - நகட்டுவடிவாகிய, நெடுவேல் - நெடிய வேற்படையையுடைய, வள்ளி துணை - வள்ளிநாச்சியாருக்கொப்பாகிய, கேள்வன் - கணவன், புள்ளுடன் மகிழ்ந்த - புள்ளோடுகூடி

மகிழ்ந்த, கறங்கு - ஒலிக்கின்ற, கால் - நீரையுமிழா நின்ற, அருவி — அருவியாறுகளையுடைய, பரங் குன்று உடுத்த-திருப்பரங்குன்றம் சூழ்ந்த, பொன் நகர்—பொன் மாடங்களையுடைய, கூடல் - மதுரை யிலெழுந்தருளிய, சென்னியம் பிறையோன் - சிரத் தில் அழகிய பிறையையுடையோன்.

(வி-ரை) உடலக்கண்ணன் என்பதில் அகரம் பண்டறிசுட்டு. "உண்டற்குரிய வல்லாப் பொருளை, யுண்டனபோலக் கூறலும் மரபே" என்ற விதி யால் 'உண்ட' என்றார். தாருகாசுரனைக் 'கிளை' என்றார் துணையாகலின். விட்டென்ற செய்தெ னெச்சம் காரணகாரியமின்றி வந்தது; "அகன மர்ந்து செய்யாளுறையும்" என்பதிற்போல. தேனை யுடைய விருட்டுடன் மதி வேற்றுமை தெரியாது கிடக்கும் எனினுமாம். கிடக்குமென்னும் பெய ரெச்சம் நிலப்பெயர் கொண்டது. கறங்கி வீழா நின்ற அருவியெனப்பொருள் கொள்ளின். "நிலத் தலை இயதுப்பெலா நிறைதுளும்புமுரகனே" என் றாற்போலக்கொள்க. பிறையோன் என்பதானப் பெயராக்காது, "முன்னத்தினுணருங்கிளவியுமு ளவே" என்பதனுலமைக்கினுமாம். கிளைகள் விட் டொளித்த என்பது பாடமாயின்களம் என்பது கள் ளென விகாரமாயிற்றெனக்கொள்க. இவ்வாறு களமென்றாற்போல அகவற்பாவி லசைமிக்கு வருதலுமுண்டு. பணிவர என்பதற்குச் சொல்வ ழியினிற்கவென்றலுமொன்று. இந்திரனைப் பணிந்து நிற்பவெனினுமாம். தருவென்பது மரப் பொதுப்பெயராயினும் பணிவரப் படைத்தவுடலக்

கண்ணன் எனமேல் வருவதால் கற்பகத்தருவைக் குறித்தது. அகலிகைவிழைவாற் கௌதமர் சாப மேற்றமை தோன்ற 'உடலக்கண்ணன்' என்றார். பரங்குன்று ஆறுபடை வீட்டினுளொன்று. பொன்னகர்க்கூடல் என்பதற்குப் பொன்னுலகு போலுங்கூடல் என்றுரைப்பினு மமையும்.

---

## ௧௧. சாமிநாத தேசிகர்

### பெயர்

சாமிநாதன் என்னும் பெயர் இவருடைய இரு முது குரவரா லிவருக் கிடப்பட்டது. இப்பெயர் தகப்பன்சாமியானமை பற்றி முருகக்கடவுட் கேற் பட்ட காரணப்பெயர். தேசிகர் என்பது ஞான நூல் கற்று அறிவொழுக்கங்களிற் சிறந்து துறவு மார்க்கத் தாசிரியரானமை பற்றி ஏற்பட்ட சிறப் புப்பெயர்.

### இடம்

இவர் தோன்றிக் கல்விகற்றுச் சிறப்படைந்த இடம் பாண்டிநாட்டிலுள்ள திக்கெலாம் புகழுந் திருநெல்வேலி.

### காலம்

ஏறக்குறைய மூந்நூறு யாண்டுகட்கு முன்னிருந்தவர்.

### குலம்

சைவ வேளாளர் குலம்.

### சமயம்

சைவசமயம்.

## வாழ்க்கை வரலாறு

கல்வியறிவிலும் ஒழுக்கத்திலும் இளமையிலேயே சிறந்த இவர், கல்லாடவுரை யியற்றிய மயிலேறும் பெருமாள்பிள்ளையிடம் எல்லா நூல்களையும் வழுவற இனிது கற்றுத் தேறினர். இளம் பருவத்திலேயே துறவற நெறியில் விருப்பமுடையவராய்த் திருவாவடுதுறை யாதீனத்தையடைந்து அங்கு எழுந்தருளியிருந்த பெரியாரிடத்திலே சமயதீக்கையும் விசேடதீக்கையும் பெற்றுச் சிவாச்சிரமத்திற்குரிய துறவறத்தை யடைந்து ஆசிரியரோடு அண்மைத்தொண்டரா யமர்ந்திருந்தார்.

இவருக்கு வடமொழிப் பயிற்சியும் நன்கமைந்திருந்தது. இவருக்கு வடமொழி நூல்களைக் கற்பித்தவர் திருநெல்வேலிக் கருகிலுள்ள செப்பறை கனகசபாபதி சிவாசாரியார் என்பவர். இச்செய்தி;

"செப்பறைப் பதியில் வாழ்சிவத் துவிசன்
கனக சபாபதி கருதுவட நூற்கடல்
தபோதனர் புகழும் சைவாதி ராசன்
உபய பதங்களை உண்மையொடு பணிவாம்,"

என்னும் இலக்கணக்கொத்துப் பாட்டால் நன்கு விளங்கும்.

இவர், வடமொழி தென்மொழி நூல்களை யெல்லாம் பன்னிரண்டு ஆண்டுகள் கற்றனராம். இவர் தாம் கற்ற இலக்கண இலக்கியங்களில் மறைந்து கிடந்த பல விதிகளையு மொன்றுசேர்த்து, 'இலக்கணக் கொத்து' என்னுமொரு இலக்கணநூல் செய்தார். வடமொழிப் போக்குக்களையே பற்றிக்

கொண்டு நியங்கும் இயல்பினையுடையாரிவர். தாய் மொழியாகிய தமிழைவிட மிலேச்ச மொழியாகிய ஆரியத்திடத்தில் இவருக்கு அதிகப் பற்றுண்டு. தமிழ்மொழிக்கும் வடமொழிக்கும் இலக்கணம் ஒன்றென்பது இவருடைய கொள்கை. இவர் திருவாவடுதுறையிலே வசித்துக்கொண்டிருந்த போது, திருவாரூரில் தோன்றியவரும், இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுணர்ந்தவரும், இலக்கண விளக்கம் என்னும் இலக்கண நூலைத் தொகுத்தவருமாகிய வைத்தியநாத நாவலர் என்பவர் திருவாவடுதுறைக்கு வந்தார்.

பந்தியில் உண்டுகொண்டிருக்கும்போது, ஆதீனத் தலைவரவர்கள் இந்நாவலரைநோக்கி, "வந்த விளைப்பாற் போசனஞ் செவ்வையாகச் செய்தற் கிசையவில்லையோ" என்று கேட்டனர். உடனே அந்நாவலர் ஆதீனத் தலைவரை நோக்கி 'வந்த விளைப்பு' என்னுந் தொடர்மொழிக்கு இலக்கணம் ஆராயத் தொடங்கினர். அப்போது ஆதீனத் தலைவர் சாமிநாத தேசிகரைப் பார்த்துக் குறிப்புக் காட்டினர். உடனே சாமிநாத தேசிகர், அச் சொற்றொடரின் பொருள் முடிபுகளை இனிது விளக்கினர். இதனைக் கேட்ட வைத்தியநாத நாவலர் மிகுந்த விருப்படைந்து சாமிநாத தேசிகரைப் பெரிதும் போற்றினர்.

இவர் தாம்செய்த இலக்கணக்கொத்து என்னும் நூலுக்குத் தாமே உரையுமெழுதினர். நூல் செய்தோரே உரையும் செய்யலாமா? என்னும் ஐயத்திற்கு;

நூல்செய் தவனந் நூற்குறை யெழுதல்
முறையோ எனிலே அறையக் கேணீ
முன்பின் பலரே என்கண் காணத்
திருவா ரூரில் திருக்கூட் டத்தில்
தமிழ்க்கிலக் காகிய வயித்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துரை எழுதினன்
அன்றியும் தென்றிசை ஆழ்வார் திருநகர்
அப்பதி வாழும் சுப்பிர மணிய
வேதியன் தமிழ்ப்பிர யோக விவேகம்
உரைத்துரை எழுதினன் ஒன்றே பலவே.

என்று சமாதானமும் கூறினர்.

நன்னூற்கு விருத்தியுரை செய்த சங்கர நமச்சிவாயப் புலவர் இவருடைய மாணவர் ஆவர் என்பது.

"தன்னடித் தாமரை தந்தெனை ஆண்ட
திருவா வடுதுறைத் தேசிக னாகிய
கருணையங் கடலையென் கண்ணை விட் டகலாச்
சாமி நாத குரவனை யனுதினம்
மனமொழி மெய்களிற் றொழுதவ னருளால்"

என்று சங்கர நமச்சிவாயப் புலவர் தன்னுடைய உரைச் சிறப்புப்பாயிரத்துள் உரைத்தமையின் பெறப்படும்.

## இலக்கண இலக்கியப் பயிற்சி

வடமொழி தென்மொழி எனு மிருமொழியினுள்ளுமுள்ள இலக்கண இலக்கிய நூல்கள் எல்லாவற்றினும் இவர் வல்லவரென்பது இவருடைய நூலாலும் உரையாலும் நன்கறியப்படும்.

### சமகாலத் தாசிரியர்கள்

இலக்கண விளக்கம் வைத்தியநாத நாவலர், நன்னூல் விருத்தியுரை சங்கர நமச்சிவாயப்புலவர், பிரயோக விவேகம் சுப்பிரமணிய தீட்சிதர் முதலியோர் இவர்காலத்திலிருந்த புலவர்களாவர்.

### பிறநூல்கள்

இவ் விலக்கணக்கொத்து நூலையும் உரையையும் அன்றித் தசகாரியம் என்னும் ஞான நூலையும் இவர் செய்துள்ளார். திருச்செந்தில் கலம்பகம் என்னும் நூலும் இவரால் செய்யப்பெற்றதே.

### உரைப் போக்கு

சிறிதினைச் சிறியேன் சிறிய சிறார்தமக்
குரைத்தன னன்றியீ தொருநூ லன்றே
யிவ்வழக் கறிந்தோ ரிகழுதல் வழக்கே
யிவ்வழக் கறியா ரிகழுதல் வழக்கே.

கற்றோரெல்லாருள்ளுங் கடையேனென்பது தோன்றச் சிறியேனென்றும், கூறியோர்க்குத் தொல்காப்பிய முதலிய நூல்களிருத்தலால் ஏனையோர்க்கே இதுவென்பது தோன்றச் சிறியவென்றும், தருணர்க்கெல்லாம் அந்நூல்களிருத்தலிற் பாலர்க்கே இதுவென்பது தோன்றச் சிறாரென்றும், ஓரதிகாரமாயினும் இதனுள் அறியக்கூடாதென்பதுதோன்ற நூலன்றென்றும், நூலன்றென்று எம்மாற் சொல்லியிருக்கவே குற்றமுண்டாயினுங் கூறாரென்பது தோன்ற வழக்கேயென்றும், வழக்கறியாதார் வழக்கையு மிகழுதல் இயற்கையேயென்பது தோன்ற வழக்கேயென்றுங் கூறினும். "காண

தாற் காட்டுவான்றான் காணான் காணாதான்—கண் டானாந் தான் கண்டவாறு" என்பதனுள் இகழ்ந வியற்கையென்பது காண்க.

அவையடக்கமென்று பெயரிட்டு இங்ஙனம் பல வற்றையும் விரித்ததனாற் பயனென்னெனின், பல வாற்றானும் புழுத்த நாயினுங் கடையேன தறியா மையை எல்லோர்க்கும் அறிவித்த லொன்றுமே பயனென்க. இவ்வாசகம் முடிந்தது முடிந்த லென்னு முத்தி.

---

## ௧௨. சங்கர நமச்சிவாயப் புலவர்

### பெயர்

இவருக்குப் பிள்ளைக்காலத்தில் பெற்றோர்க ளால் இடப்பெற்ற பெயர், சங்கரநமச்சிவாயன் என்பது. 'புலவர்' என்பது பின்னர் அறிவாற்ற லாற் பெற்ற சிறப்புப்பெயர்.

### இடம்

பாண்டி நாட்டுத் திருநெல்வேலியில் தோன் றிய இவர் ஆண்டே கல்விகற்றுச் சிறப்புற்றிருந் தார்.

### காலம்

இலக்கணக்கொத்துச் சாமிநாத தேசிகரின் மாணவராதலின் அவருடைய காலத்தினரே.

### குலம்

பாண்டிநாட்டு வேளாளர் குலம்.

### சமயம்

சைவசமயம்.

### வாழ்க்கை வரலாறு

திருநெல்வேலியிற் றோன்றிய இவர்; ஆங்கிருந்த இலக்கணக்கொத்து நூலாசிரியராகிய சாமிநாத தேசிகரிடம் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும், சங்க இலக்கியங்களையும் ஐயமறக் கற்றறிந்தார். பின்னர் அந்நாட்டிலிருந்த ஊற்றுமலை என்னும் ஊருக்குச் சொந்தக்காரராக விருந்த இருதயாலய மருதப்பதேவர் என்பவருடைய அவைக்களப் புலவராக வமர்ந்திருந்தார். அவ்ருடைய விருப்பப்படியே இவர் நன்னூல் விருத்தியுரையைச் செய்தார். இவர் இவ்வுரையை யியற்றுங்காலத்தில் இவருக்குத் திங்களொன்றுக்கு நான்குகோட்டை நெல்லும், தினம் ஒருபடி பாலுங் கொடுக்கப் பெற்றனவாம். உரை யரங்கேற்றப் பட்ட பின்னர்த் தக்க பரிசளிக்கப்பட்டதாம்.

### இலக்கண இலக்கியப் பயிற்சி

இவர் தம்முடைய வுரையிலே, அகநானூறு, அரிச்சந்திர புராணம், ஆசாரக்கோவை, இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கம், இறையனாரகப்பொருள், ஐங்குறுநூறு, ஐந்திணையம்பது, ஒருதுறைக்கோவை, கந்தபுராணம், கம்பராமாயணம், கலித்தொகை, களவழி நாற்பது, கார்நாற்பது, குறுந்தொகை. கோடீசுரக்கோவை, சிலப்பதிகாரம், சிவஞான சித்தியார், சீவக சிந்தாமணி, சூளாமணி, தக்கயாகப் பரணி, தண்டியலங்காரம், தனிப்பாடல் திரட்டு, திணைமாலை நூற்றைம்பது.

திரிகடுகம், திருக்குறள், திருக்கோவையார், திருநூற்றந்தாதி, திருவாசகம், திருவாய்மொழி. திருவிளையாடற்புராணம், தேவாரம், தொல்காப்பியம், நம்பியகப்பொருள், நளவெண்பா, நற்றிணை, நாலடியார், நான்மணிக்கடிகை, நீதிநெறிவிளக்கம், நேமிநாதம், நைடதம், பட்டினத்தார் பாடல், பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு, பரிபாடல், பன்னிருபடலம், பிரபுலிங்கலீலை, பிரயோகவிவேகம், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, பெரியபுராணம், பெருங்கதை, மணிமேகலை, யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம், வச்சணந்திமாலை, வில்லிபாரதம், வெண்பாப்பாட்டியல் ஆகிய நூல்களிலிருந் தெல்லாம் மேற்கோள் காட்டியிருக்கின்றன ராதலின் இவைகளிலெல்லாம் பயிற்சியுடையாரென்பது பெறப்படும்.

### சமகாலத் தாசிரியர்கள்

இலக்கண விளக்கம் வைத்தியநாத நாவலர் சுப்பிரமணிய தீட்சிதர், சாமிநாத தேசிகர், மயிலேறும் பெருமாள்பிள்ளை முதலியோர் இவர்காலத்தினரே.

### உரைநயம்

நன்னூலுக்கு இவரியற்றியவுரை விருத்தியுரை. சிவஞான முனிவர் தாம் வடமொழி தென்மொழியுட்கண்ட அரிய இலக்கண முடிபுகளை, இவருடைய உரையினிடையிடையே செருகி மிகச் சிறப்பாக்கியிருக்கிறார். இவர் உரை மயிலைநாதர் உரைப்போக்கை அனுசரித்ததாயினும், மயிலைநாதருக்குப் புலப்படாத பல அரிய செய்திகளை இவரெடுத்

துக் காட்டுகின்றார். பல விடங்களில் மறுத்தும் உள்ளார். இவர் பழைய நூல்களினிடத்தும் அவற்றின் ஆசிரியரிடத்தும் பெரிதும் மதிப்புடையவ ரென்பது உரையிற் புலனாம். உவமைகளாற் பொருளை விளக்கிக்காட்டி, மாணுக்க ருள்ளத்தே நன்கு பதியுமாறு எழுதுவதில் இவர் மிகவும் வல்லவர். இவர் எடுத்துக்காட்டும் மேற்கோள்களெல்லாம் நீதிநூற்செய்தி முதலிய பயன்பொருந்தியவைகளாக விருக்கும். அல்லது மாணுக்கருள்ளத்தே கடவுணம்பிக்கையை யுண்டாக்கக் கூடிய சமய சம்பந்தமானவைகளாக விருக்கும்.

## உரைப் போக்கு

*பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த*
*நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே*

எ-ன். கடவுள் வணக்கமும் அதிகாரமும் உணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) பூக்கள் மலிந்த அசோகமரத்தினது அலங்கரிக்கும் நிழலின்கண் எழுந்தருளியிருந்த நான்கு திருமுகங்களையுடைய கடவுளை வணங்கி நன்றாகச் சொல்லுவன், எழுத்திலக்கணத்தை. எ-று.

எல்லா நூலும் மங்கலமொழி முதல் வகுத்துக் கூறவேண்டுதலிற் பூமலியென்றும், எல்லாச் சமயத்தோராலும் வணங்கப்படும் படைப்பு முதலிய ஐந்தொழிற்கு முரிய எல்லாக் கடவுளாகியும் நின்றொருவனே யென்பார் அருகனை நான்முகனென்றுங் கூறினார். இவ்வாறு வள்ளுவநாயனாரும்.

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

என வரையாது கூறுதல் காண்க. எழுத்தென்பது ஆகுபெயர்; ஏகாரம் ஈற்றசை எல்லாம் வல்ல கடவுளை வணங்கலான் இனிது முடியுமென்பது கருதி மன்னியம்புவனென்று புகுந்தமையின் இது நுதலிப் புகுதலென்னும் உத்தி.

## உரைச்சிறப்புப்பாயிரம்

நன்னூலுட் கருத்துலகோ ரறியவுரை
செய்கவென நரேந்த்ர சிங்கம்
தென்னூற்று மலைமருதப் பன்புகலப்
பொருள்விளங்கச் செய்தான் பாரில்
எந்நூற்கு மெழுத்தொடுசொற் பொருளறிசங்
கரநமச்சி வாய னென்னும்
பன்னூற்செந் தமிழ்ப்புலவன் சைவசிகா
மணிநெல்லைப் பதியி னானே. (1)

அகத்தியந்தொல் காப்பியமே முதலியமுன்
னூல்கள்பல வாய்ந்து முப்பால்
பகுத்ததிரு வள்ளுவரே முதன்ஞான
நூல்களெலாம் பகல்செய் வான்போல்
இகத்திலுரை செயவலசங் கரநமச்சி
வாயனெனும் இயற்பேர் பெற்ற
தகைப்புலவ னன்னூலுக் குரைவகுத்த
தொருவியப்போ தமிழ்வல் லோரே. (2)

முன்னூற்கு மலயமுனி தன்னூற்கும்
புவியிடத்து முதியோ ராற்சொல்
எந்நூற்குந் தமிழ்க்கடலு ளினியவற்று
நூற்கும்வகை இதனாற் காட்டி

கன்னூற்கு விரித்துரைசெய் தான்திகழ்
தந்தளவும் நடத்துங் கீர்த்தித்
தென்னூற்று மலைமருதப் பன்சொலச்சங்
கரநமச்சி வாயன் றானே. (3)

---

## ௧௫. வைத்தியநாத தேசிகர்

### பெயர்

'வைத்தியநாதன்' என்பது புள்ளிருக்கு வேளூரென்னும் வைத்தீசுவரன் கோவிலில் எழுந்தருளியுள்ள சிவபிரானுடைய பெயர். இப்பெயர் இவருடைய பெற்றோர்களால் இடப்பட்டது. தேசிகர் என்பது வகுப்புப்பற்றி வந்த பட்டப்பெயர்.

### இடம்

இவர் தோன்றிய இடம் திருவாரூர் என்பது ஐயத்திற் கிடமின்றி யறியப்படுகிறது.

### காலம்

இவர் வாழ்ந்திருந்த காலம் இற்றைக்கு மூந்நூறு யாண்டுகட்குச் சற்றேறக்குறைய வாகும்.

### குலம்

பரம்பரைச் சைவாசாரியார் மரபு.

### சமயம்

சைவசமயம்.

### வாழ்க்கை வரலாறு

இவருடைய தந்தையார் பெயர் வன்மீகநாத தேசிகர். இவர் இளமைப் பருவத்திலேயே இருமுது குரவரின் ஆதரவை இழந்து அகோரமுனிவர்

என்பவருடைய ஆதரவிலே வளர்ந்து கல்வி கற்றார். இவர் இளமையிலேயே இறைவனிடத்துப் பேரன்புகொண்டு தம்மையும் மறந்து அத்தலைவனை எண்ணியிருக்கும் உயர்நிலை கைவரப் பெற்றார். இதனால் இவருடைய ஆசிரியராகிய அகோர முனிவரும் இவருடன் நெருங்கியிருத்தற்கு அஞ்சினராம். இவர் தங்கம் என்னும் மாதினைத் திருமணம் புரிந்து அம்மாதுடன் இல்லறத்தை இனிமைபெற நடத்தினர். இவருக்கு சதாசிவம், தியாகராசன், சிதம்பரநாதன், வடுகநாதன், வன்மீகநாதன் என்று ஐந்து பிள்ளைகள்.

இவர் மாணவர்கட்கு ஓய்வு ஒழிவின்றி நூல்களைப் பாடஞ்சொல்வதையே தமது தொழிலாகக் கொண்டிருந்தார். ஒரே நிலையிலுட்கார்ந்து பாடஞ் சொல்வதனால் ஏற்படும் கால்வலியைக் கூடச் சிறிதும் பொருட்படுத்தமாட்டார். இவர் திருவாரூரில் நின்றும் புறப்பட்டுத் திருநெல்வேலி செல்லும்போது திருமலைநாயக்கரது காரியத் தலைவராக விருந்த திருவேங்கடநாதையர் என்பவரைச் சந்தித்தார். இவருடைய கல்வியறிவாற்றலைக் கண்ட அவர் தம்முடைய பிள்ளைகட்குத் தமிழாசிரியராக இருக்கும்படி ஏற்பாடு செய்தார். அப்பொழுது இவர் பாடஞ்சொல்லும்போது செய்த நூல்தான் இலக்கண விளக்கம் என்று பெயர் பெற்றதாம்.

இவ்விலக்கண விளக்கத்துள் கண்ட பல வழுக்களையும் சிவஞான முனிவர் எடுத்துக்காட்டி 'இலக்கணவிளக்கச் சூறாவளி' என்னுமொரு மறுப்பு நூல் எழுதியுள்ளார்.

### இலக்கண இலக்கியப் பயிற்சி

அக்காலத்தில் வழங்கிய தொல்காப்பியம் நன்னூல் முதலிய இலக்கண நூல்கள் எல்லாவற்றிலும் இவர் மிக வல்லுநரென்பது இவர் செய்துள்ள இலக்கண விளக்க நூலால் இனிது பெறப்படும்.

### சமகாலத் தாசிரியர்கள்

இலக்கணக் கொத்துரைசெய்த சாமிநாததேசிகர், கல்லாடவுரை செய்த மயிலேறும் பெருமாள் பிள்ளை, சங்கர நமச்சிவாயப்புலவர் முதலியோர் இவருடைய காலத்திலிருந்த சிறந்த புலவர்களாவர்.

### பிற நூல்கள்

இலக்கணக்கொத்து மூலத்தையும் உரையையும் இவரே செய்தாரென்பது, சாமிநாத தேசிகர் இலக்கணக்கொத்தில் கூறியிருப்பதால் நன்கு விளங்கும். இலக்கணவிளக்க வுரையேயன்றி, கமலாலய அம்மை பிள்ளைத்தமிழ், திருவாரூர்ப் பன்மணிமாலை, மயிலாசலப் பிள்ளைத்தமிழ், பாசவதைப் பரணி, திருவாட்போக்கிப் புராணம், நல்லூர்ப் புராணம் முதலிய பிறநூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

### உரைப்போக்கு

இலக்கண விளக்கம் பொருளதிகாரம்
க-வது அகத்திணையியல்

உவமையுரு வுருமடுத் துலகினைப் பொழிக்கும்
இமையவ னடிபணிந் தியம்புவன் பொருளே.

என்பது சூத்திரம். மேற்பாயிரத்துள் "எழுத்து முதன் மூன்றையும்" என நிறுத்த முறையானே எழுத்துஞ் சொல்லும் உணர்த்திப் பொருள்

உணர்த்துகின்றாராகலின் இவ்வதிகாரம் பொருளதிகாரமென்னும் பெயர்த்து. பொருளை உணர்த்திய அதிகாரமென விரிக்க. பொருளென்றது அதன் இலக்கணம்; அதிகாரமென்றது முறைமை. பொருளாவது மேல் உணர்த்திப்போந்த சொற்றொடர் கருவியாக உணரப்படுவதாகலின் மேல் அதிகாரத்தோடு இயைபுடைத்தாயிற்று. இவ்வதிகாரத்துள் ஐவகை யோத்தினாற் பொருளிலக்கணம் உணர்த்துகின்றார். அவற்றுள் இம்முதலோத்து அகத்திணை இயல்பு உணர்த்திற்றாகலான் அகத்திணையியலென்னும் பெயர்த்து. அகமென்றது உள்ளம், திணையென்றது ஒழுக்கம், இயலென்றது இலக்கணம்; எனவே, அகத்திணை யியலென்றது உள்ளத்தின்கண்ணே நிகழும் இன்பமாகிய ஒழுக்கத்தினது இலக்கணம் என்றவாறாயிற்றென்பது.

இதனுள் இத்தலைச் சூத்திரங் கூறத்தொடங்கிய பொருள் இனிது முடியும்பொருட்டு வணக்கமும் அதனன் முடிபெய்தும் பொருளும் உணர்த்துவதாகிய சிறப்புப்பாயிரங் கூறுகின்றது.

(இ - ள்.) உமாதேவியினது திருவுருவைத் தனது திருவுருவின் கண்ணே அடக்கி உலகத்து இளைப்பினை ஆற்றும் இறைவனது தாளை வணங்கி யான் சொல்லுவன் பொருளிலக்கணத்தை. (எ - று.)

ஈண்டு உலகமென்றது உலகினையும் உலகினுள்ள சீவான்மாக்களையும், ஆகுபெயராற் பொருளென்றது அதன் இலக்கணத்தையும் உணர்த்தின்றன. ஏனையவற்றிற்கும் ஏற்குமாறு "மலைமகளொருபால்'' என்னுஞ் சூத்திரத்திற்கு உரைத்தாங்குப் பொருள் விரித்து உரைத்துக்கொள்க.

## கசு. சிவஞானமுனிவர்

### பெயர்

இவருக்குப் பிள்ளைக் காலத்தில் இடப்பெற்ற பெயர் முக்களாலிங்கர் என்பது. பின்னர்த் துறவு வழியைக் கைக்கொண்ட காலத்தில் அறிவாசிரியரால் அளிக்கப்பெற்றது 'சிவஞானம்' என்னும் பெயர். 'முனிவர்' அல்லது 'யோகி' என்னும் சிறப்புப் பெயர் பின்னர்ப்பெருமையுஞ் சிறப்பும் நோக்கி அமைந்தன.

### இடம்

பாண்டி நாட்டில் பாபநாசம் என்னும் ஊருக் கணித்தேயுள்ள விக்கிரமசிங்கபுரம் என்பது இவர் பிறந்த இடமாகும். திருவாவடுதுறை காஞ்சி முதலிய இடங்களிற் பிற்காலத்தில் வசித்திருந்தார்.

### காலம்

இருநூறுயாண்டுகட்கு முன்னராகும்.

### குலம்

பாண்டிநாட்டுச் சைவவேளாளர் குலம்.

### சமயம்

சைவசமயம்

### வாழ்க்கை வரலாறு

விக்கிரம சிங்கபுரத்தில் வாழ்ந்திருந்த ஆனந்தக் கூத்தர் என்பவருக்கும் மயிலம்மை என்பவருக்கும் பிள்ளையாய்த்தோன்றிய இவர், இளமைக் காலத்தில் தானே அடியார்மாட்டன்பு, கல்வியறிவு, ஒழுக்கம் முதலிய நற்பண்புகளிலே சிறந்து விளங்கினர். அந்நாளில் திருவாவடுதுறை மடத்துத் தம்பி

ரான்கள் சிலர் ஆண்டுச் சென்றிருந்தனர். அவர்களுடன் தொடர்புடையவராய் இவர் அவர்களைப் பின்பற்றிச் சென்று, மெய்யறிவு நூல்களை ஐயந்திரிபற வோதியுணர்ந்ததன்றி, ஐந்திலக்கணங்களையும் தக்கார் மாட்டு வழுவறப் பயின்றுணர்ந்தார். வடமொழி நூல்களையும் கற்று அவைகளிலும் வல்லவரானார். இவர், தாம்கற்ற நூல்களைத் திருத்தணிகைக் கச்சியப்பர், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர், கச்சிச் சிதம்பரமுனிவர், கச்சி முத்துக் குமாரதேசிகர், கச்சிச் சரவணபத்தர், இலக்கணம் சிதம்பரநாதமுனிவர் முதலிய பலருக்கும் நன்குணர்த்தி அவர்களையும் கல்வியில் வல்லவர்களாகச் செய்து உலகிற்குப் பயன்படுத்தினார்.

இவர் திருப்பாதிரிப்புலியூர் என்னும் இடத்தில் எழுந்தருளியிருந்தபோது ஒரு செல்வர்; "கரையேற விட்ட முதல்வா வுன்னை யன்றியுமோர் கதியுண்டாமோ" என்னும் ஈற்றடியைக் கொடுத்துச், செய்யுள் ஒன்று நயமுறச் செய்பவர்கட்கு நூறு பொன் பரிசளிப்பதாக அறிக்கை செய்தார். ஓர் ஏழைப் பார்ப்பானின் விருப்பப்படி சிவஞான முனிவர்,

"வரையேற விட்டமுதஞ் சேந்தனிக்
உண்டனைவல் லினமென்றாலும்
உரையேற விட்டமுத லாகுமோ
வெனச்சித்தென் றுரைக்கிலென்னும்
நரையேற விட்டமுத னளவனுக்
கொண்டுகறும் புலிசைமேவும்
கரையேற விட்டமுதல் வாவுன்னை
யன்றியுமோர் கதியுண்டாமோ."

என்று அச்செய்யுளை முற்றுவித்து அப்பார்ப்பன னுக்கு அப்பரிசைப் பெற்றுக்கொடுத்தார். கண்டனங்கள் எழுதுவதிலும் நூல்கள் எழுதுவதிலும் இவர் மிகுந்த ஆற்றல் வாய்ந்தவர். இலக்கண விளக்கத்தில் தாங்கண்ட தவறுகளையெல்லாந் தொகுத்து, 'இலக்கணவிளக்கச் சூறாவளி' என்னும் ஒரு நூலினை எழுதினர். வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையரது தொல்காப்பியச் சொல்லதிகாரவுரையையுஞ் சிலவிடங்களில் மறுத்துள்ளார். சங்கர நமச்சிவாயப் புலவரால் எழுதப்பெற்றிருந்த நன்னூல் விருத்தியுரையை நன்கு பரிசோதித்துத், தாம் கண்டறிந்த இலக்கண முடிபுகளையெல்லாம் அவ்வுரையின் இடையிடையே செருகி அவ்வுரையைச் சிறப்புறச் செய்தார்.

### இவர் செய்த நூல்களும் உரையும்

தொல்காப்பியத்தின் பாயிரத்திற்கும் முதற் சூத்திரத்திற்கும் விரிவான உரைசெய்தார். மெய்கண்டார் செய்த சிவஞான போதத்திற்கு மாபாடியம் செய்தார். இவ்வுரைகளைத் தவிர, காஞ்சிப்புராணத்தின் முதற்காண்டம், சோமேசர் முதுமொழி வெண்பா, குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, இளசைப்பதிற்றுப் பத்தந்தாதி, கலைசைப்பதிற்றுப் பத்தந்தாதி, கலைசைப்பதிற்றுப் பத்தந்தாதி, கச்சி ஆநந்தருத்திரேசுரர் பதிகம், திருவேகம்பர் ஆநந்தக் களிப்பு, கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், இராசவல்லிபுரம் அகிலாண்டேசுவரி பதிகம், திருவேகம்பரந்தாதி, திருமுல்லை

வாயிலந்தாதி. திருத்தொண்டர் திருநாமக் கோவை, பஞ்சாக்கரதேசிகர்மாலை, கம்பராமாயண முதற் செய்யுட் சங்கோத்தர விருத்தி, தருக்கசங்கிரகம் அன்னம்பட்டீயம், சிவஞான போதச் சிற்றுரை, சிவஞானசித்திப் பொழிப்புரை, சித்தாந்தப் பிரகாசிகை முதலிய பல நூல்களுஞ் செய்துள்ளார்.

மறுப்புக்கள் எழுதுவதில் இவர் மிகுந்த வன்மையுடையவர். கம்பராமாயணத்தின் பெருமையைச் சில வைணவர் இவரிடம் வியந்து பாராட்டினர். அவர்களுடைய செருக்கினையடக்குமாறு இராமாயணத்தின் முதற் செய்யுளாகிய, 'நாடிய பொருள் கைகூடும்' என்னும் காப்புப்பாட்டே மிகுந்த குற்றமுடைத்து என்று மறுத்துரைத்ததுடன் தாமே அவற்றிற்குச் சமாதானமுங் காட்டினார்.

## உரைநயம்

இவருடைய வுரை மிகத் திருத்தமும் விளக்கமும் அமைந்ததாகவிருக்கும். யாவர் எழுதியதாக விருப்பினுஞ்சரி. தங்கருத்துக்கு மாறுபட்டதாக அல்லது உண்மைக்கு மாறுபட்டதாக இருப்பதாகக் கண்டால் இவர் அதனை மறுக்காதுவிடார். கற்போருக்கு எவைவிளங்காவென்று நுனித்துணர்ந்து அவற்றிற்கு விளக்கமாகப் பொருள் எழுதுவதில் இவர் மிகவல்லுநர். சிவஞானபோதத்திற்கு இவர் செய்தமாபாடியம் சைவசமயிகளால் பொன்னேனப் போற்றப் பெறுகின்றது.

## உரைப் போக்கு

எழுத்ததிகார மென்பது எழுத்தினததிகாரத்தை யுடையதென அன்மொழித்தொகையாய் அப்படலத்திற்குக் காரணக்குறியாயிற்று.

எழுத்தென்றது அகரமுதனகர விறுவாய்க் கிடந்த முப்பதுங் குற்றியலிகரமுதலிய மூன்றுமாம். அவற்றிற்கெழுத்தென்னுங்குறி முன்னர் "எழுத்தெனப்படுப" என்னுஞ் சூத்திரத்தாலோதுப வாகலின் ஈண்டெடுத்திரது போற்றியாளப்பட்டது.

அதிகாரம் அதிகரித்தல். அஃதிருவகைப்படும். அவற்றுளொன்று வேந்தனிருந்துழி யிருந்து தன்னில முழுவதுந் தன்னாணையினடப்பச் செய்வது போல ஒரு சொன்னின்றுழி நின்று பல சூத்திரங்களும் பலவோத்துக்களுந் தன் பொருளே நுதலிவரச் செய்வது. ஒன்று சென்று நடாத்துந் தண்டத்தலைவர் போல ஓரிடத்து நின்ற சொற் பல சூத்திரங்களோடுஞ் சென்றியைந்து தன் பொருளைப் பயப்பிப்பது. இவற்றிற்கு முறையே வடநூலார் யதோத்தேச பக்கமெனவுங் காரிய கால பக்கமெனவுங் கூறுப. இது சேனாவரையருரையானுமுணர்க. அவற்றுளீண்டதிகார மென்றது முன்னையது. அதனை யுடையதெனவே, எழுத்தை நுதலிவரும் பலவோத்தினது தொகுதி எழுத்ததிகார மென்ற வாறாயிற்று. எழுத்தின ததிகாரத்தையுடைய தென்புழி ஆறாவது வினைமுதற் பொருண்மையின் கண்வந்த காரகம்.

# கரு. இராமாநுசக் கவிராயர்

## பெயர்

இவருடைய இயற்கைப் பெயர் இராமாநுசர் என்பது. கவிராயர் என்பது கல்விச் சிறப்பால் பெற்ற பெயர்.

## இடம்

இவருடைய பிறப்பிடம் இராமநாதபுரம். இவர் பிற்காலத்தில் சென்னை மாநகரத்தில் வசித்திருந்து தமிழ் வளர்க்கும் தொழிலிலே ஈடுபட்டிருந்தார்.

## காலம்

இற்றைக்கு நூற்றிருபது யாண்டுகட்கு முன்னிருந்தவர்.

## சமயம்

இவருடைய சமயம் வைணவமென்பது இவருடைய பெயராலேயே ஐயமின்றி அறியப்படும்.

## வாழ்க்கை வரலாறு

இவருடைய தாய் தந்தையருடைய பெயர் விளக்கமாகத் தெரியவில்லை. சிவஞான முனிவருடைய மாணவர்களுள் ஒருவராகிய சோமசுந்தரக் கவிராயர் என்பவரிடம் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுணர்ந்தவர். இவர் கல்விகற்றுத் தேர்ந்ததைப் பற்றிப் பலவரலாறுகள் கூறப்படுகின்றன. இளைஞராயிருந்த காலத்தில் இவருக்குக் கல்வியில் ஆர்வமிருந்தும் ஞாபக சக்தி முதலிய குணங்கள் இன்மையின் மிகவும் மனவாட்டமடைந்து கலைமகளை நினைந்து நெஞ்சுருகித் துதித்துத்தம்முடைய கழுத்தைக் கத்தியால் அறுத்துக்கொண்டாராம். கலைமகள்

தோன்றித் திருவருள் பாலித்து மறைந்தனளாம்; அதன் பின்னர் இவர் தாம்கற்கும் நூல் பொருள் களெல்லாம் நன்கு விளங்கப் பெற்றதுடன், உள்ளத் தில் மிக வெளிதில் பதியும் பண்பும் நன்கு அமையப் பெற்றாராம். இதைப் பற்றி மற்றொரு வரலாறு: "இவர் நாற்பதாண்டளவு கல்வி யறிவற்றிருந்தா ரெனவும், ஒருகால் ஓரவையில் இவர் ஏதோ கூற ஆங்கிருந்த ஒரு புலவர் 'கற்றோரவையில் நீ பேசு தல்தகாது உன் போலும் அறிவிலிகள் மாட்டுச் சென்று நீ பேசுதல்தான் தக்கது'என்வும் கூறினர் எனவும், அவ்வுரையைக் கேட்டகவிராயர் மிகவும் வருந்தி அந்நாளிற் பேரறிஞராக விளங்கிய சோமசுந்தரக் கவிராயரிடஞ் சென்று தமக்குக் கல்வி கற்பிக்கும்படி வேண்டிக்கொண்டாராம். அதற்குச் சோமசுந்தரக் கவிராயர் அகவை முதிர்ந்து நெடும்பனைபோல வளர்ந்துள்ள நினக்கு இனிமேற் கல்வி கற்பித்தல் பயனிலதாகமுடியும்; ஆதலின் உனக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்குதல் வீண் முயற்சியாமென்று கூறி மறுத்துவிட்டா ராம். அதனால் மனம்வருந்திய இராமாநுசர், அமயம் நோக்கிக் கொண்டேயிருந்தாராம், ஒருநாள் சோம சுந்தரக் கவிராயர் பல்லக்கிவர்ந்து வீதியிற் சென்றுகொண்டிருந்தாராம். அமயம் நோக்கி யிருந்த இராமாநுசர் அவருக்கெதிராக வோடி ஒரு கத்தியால் தமது கழுத்தை யறுத்துக் கொள்ளத் தொடங்கிய தன்றித், 'தாங்கள் எனக்குக் கல்வி கற்பிக்க முடியாதெனக் கூறி விட்டமையின் நான் இவ்வாறு கழுத்தை யறுத்துக்கொண்டு சாகிறேன்'

என்றுங் கூறினாராம். உடனே கவிராயர் விரைந்து பல்லக்கை விட்டுக் கீழே யிறங்கியோடி வந்து இராமாநுசருடைய கையைப் பிடித்துக் கொண்டதன்றி 'நான் உனக்குக் கல்வி கற்பிக்கிறேன். கழுத்தை யறுத்துக்கொண்டு சாகவேண்டாம்' என்று தடுத்துத் தம்முடன் அழைத்துச் சென்று, நிகண்டு நன்னூல் முதலிய நூல்களை மனப் பாடஞ் செய்து வரக் கட்டளை யிட்டாராம். இராமநுசரும் அங்ஙனமே மனப் பாடஞ் செய்துகொண்டு சென்று ஒப்பித்தனராம். அதனால் மகிழ்ச்சியடைந்த கவிராயர் எல்லா நூல்களையும் வரன்முறையாக இவருக்குப் பாடஞ் சொல்லியருளினர்'' என்பது.

இவர் கற்கவேண்டிய நூல்களை நன்கு கற்று முடித்த பின்னர், சென்னை மாநகரை யடைந்து வண்ணாரப்பேட்டை என்னு மிடத்தில் தங்கி ஆங்கிருந்து பிள்ளையார்கோயிலில் அநுமாரையும் அமைத்து அக்கோயிலுக்குச் சஞ்சீவிராயன் கோயில் என்று பெயருமிட்டாராம். அக்காலந் தொடங்கி அக்கோயில் சஞ்சீவி ராயன் கோயில் என்று வழங்கப்பட்டதுடன், அக்கோயிலுள்ள தெரு சஞ்சீவிராயன் கோயில்தெரு என்றும், அதனைச் சூழ்ந்த இடம் சஞ்சீவி ராயன்பேட்டை என்றும் வழங்கத் தொடங்கிற்றாம்.

இவர் இங்கு தங்கியிருந்துகொண்டு பல மாணவர்கட்குக் கல்வி கற்பித்து வந்தார். திருத்தணிகை விசாகப் பெருமாளையர் சரவணப் பெருமாளையர், தாண்டவராய முதலியார், வீராசாமிச் செட்டியார், ரெவரெண்டு ஜி. யூ போப்பையர் முதலியோர் இவருடைய மாணவர்களாவர்.

இவர் சென்னை மாநகரத்தில் சீர்த்தியொடு வசித்திருந்தார். ஒருகால் இவர் சிலருடன் பெத்து நாய்க்கன் பேட்டையிலுள்ள கிருட்டிணப்ப நாய்க்கன் குளத்துத் தெரு வழியாகச் சென்று கொண்டிருந்தார். வீட்டுக்குத் தூரமாகிய பெண்கள் பலர் அக்குளத்தில் மூழ்கிக்கொண்டிருந்தனர். இதனைக் கண்ட இராமநுசக் கவிராயருடைய அறிவு தீவிரமாக வேலைசெய்யத் தொடங்கிற்று; அதன் பயனாக.

சாரவீ டிருந்தோர் படிந்துசார்ந் திடிற்சீர்
தகுபுக ழிலையென்றே வீடு
தூரமா யினரும் படிந்துவீ டடையும்
தோற்றமற் றறிந்தத னாலே
வீரவேள் அலைத்த நுதற்கணன் சென்னி
மேயதச் சுரநதி என்றால்
மாரகண் ணப்ப நாயகன் குளத்து
மகிமையா முரைசெயுந் தகைத்தோ?

என்னும் அழகிய செய்யுளொன்று வெளிப்பட்டது.

சென்னைச் சர்வகலாசாலையின் தலைவர் அக்கலாசாலைக்கு ஒரு தமிழ்ப்புலவரை ஏற்படுத்த எண்ணினார். சிலர் இராமாநுசக்கவிராயரைப் பற்றியும் இவர்தம் மாணவர்களைப் பற்றியும் பெரிதும் சிறப்புறப்பேசி, இவர்களை யாராய்ந்து இவர்களில் தக்கவரைத் தமிழாசிரியராக ஏற்படுத்த வேண்டுமென்று விளம்பினர்.

சர்வகலாசாலைத் தலைவரும் இராமநுசரையும் இவருடைய மாணவர்களாகிய மகாலிங்கையர் விசா

கப்பெருமாளையர் சரவணப்பெருமாளையர் முதலியவர்களையும் வரவழைத்து வரன்முறையாக இருக்கச் செய்து; சர்வகலாசாலைத் தலைவர், அவர்களின் அறிவின் முதுமையை ஆராயத் தொடங்கினர். அவர் இராமாநுசக் கவிராயரை நோக்கிக் 'குற்றியலுகரத்திற்கு ஓர் எடுத்துக் காட்டுக் கூறுக" என்று கேட்டார். உடனே கவிராயர் "எனக்குத் தெரியாது" என்று பதிலிறுத்தனர். இவர் கூறியதன் பொருள் சர்வகலாசாலைத் தலைவருக்கோ அல்லது இவருடைய மாணவர்கட்கோ விளங்கவில்லை. இவர் தமக்குத் தெரியாது என்று கூறிவிட்டார் என்றே அவர்கள் எண்ணினர். சர்வகலாசாலைத் தலைவர் கவிராயரின் மாணவர்களைக் கேட்டார் மாணவர்களோ நம்முடைய ஆசிரியரே தெரியாதென்று கூறிவிட்டபோது நாம் எப்படிப் பதிலளிப்பது என்று கருதிவாளா விருந்தனர். சர்வகலாசாலைத் தலைவர் கவிராயரை நோக்கிப் "பெரும்புலவராகிய தாங்களே தெரியாதென்று கூறிவிடின் மற்று யாவர்தான் கூறுவர்?" என்று கேட்டார். உடனே கவிராயர், "நான் எனக்கு எடுத்துக்காட்டு கூறத் தெரியவில்லை' என்று கூறவில்லை. எடுத்துக் காட்டுத்தான் கூறியிருக்கிறேன். நான் கூறியதில் குற்றியலுகரத்திற்கு மாத்திரமன்று முற்றியலுகரத்திற்குக்கூட உதாரணம் இருக்கின்றது. தெரியாது என்பது குற்றியலுகரத்திற்கு உதாரணம் எனக்கு என்று மொழியிடையில் வந்திருப்பது முற்றியலுகரத்திற்கு உதாரணம்" என்றனர். கவிராயரின் மறுமொழி சர்வகலாசாலைத் தலைவரையும், 'கவிரா

யருடைய மாணவர்களையும் திகைப்படையச்செய்து விட்டது. அவர்கள் தம்மடமையை எண்ணிப் பெரிதும் நாணியதுடன் கவிராயருடைய அறிவை யெண்ணி வியந்தனர். சர்வகலாசாலைத் தலைவர் கவிராயரைச் சர்வகலாசாலையின் தமிழாசிரியராக இருக்குமாறு வேண்டிக்கொண்டார். கவிராயர் தமக்கு அத்தொழில் வேண்டியதில்லையென்று மறுத்துவிட்டார். அவ்விதமாயின் தங்கள் மாண வர்களில் தக்கார் யாவரென்பதைத் தாங்களே கூறியருளினால் நல்லது என்றார். மகாலிங்கையரே தமிழாசிரியர் பதவிக்குத் தக்காரென்றும் அவரை அமர்த்தலே சால்புடைத் தென்றும் சாற்றினார். சர்வகலாசாலைத் தலைவரும் அப்படியே, மகாலிங் கையருக்குத் தமிழாசிரியர் பதவியைத் தந்தனர்.

## இவர் இயற்றிய உரை நூல்களும் பிற நூல்களும்

நன்னூல் என்பது இலக்கண நூல்கள் அனைத் திற்கும் பிற்பட்ட காலத்திலெழுந்து பெருமையினால் முற்பட்டது. இந்நன்னூலை வியந்து இலக்கணக் கொத்துரை செய்த சாமிநாத தேசிகர்

'முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினுள்
நன்னூ லார்தமக் கெந்நூ லாரும்
இணையோ என்னுந் துணிவே மன்னுக

என்று புகழ்ந்தோதியுள்ளனர். இந்நூலுக்கு இப் புலவர் காலத்திலே தக்கவுரையில்லை. அக்குறையை நீக்கும் பொருட்டு இவர் நன்னூலுக்கு அருமைமிக்க வோர் உரை இயற்றினர். அவ்வுரை விருத்தியுரை

விரித்து விளக்கப்படவேண்டிய இடங்களிலெல்லாம் தக்காங்கு விரித்துரைத்து விளக்கியுள்ளார்.

அவ்வுரையுள் திருக்குறள், தண்டியலங்காரம் இலக்கண விளக்கம், பத்துப்பாட்டு, தொல்காப்பியம், மூத்தொள்ளாயிரம், புறநானூறு, நாலடியார், நற்றிணை அகநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலக் காரிகை, திருக்கோவையார், கலித்தொகை, குறுந்தொகை, சிந்தாமணி, பதிற்றுப்பத்து, திரிகடுகம், நான்மணிக்கடிகை, மணிமேகலை, திருவாசகம், சிலப்பதிகாரம், இலக்கணக்கொத்து, ஆசாரக் கோவை, திரிகடுகம், களவழிநாற்பது, திணைமாலை, முதலிய பழைய நூல்களிலிருந்து மேற்கோள்களெடுத்துக் காட்டியுள்ளார். நன்னூலுரையையன்றி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, திருக்குறள் ஆகிய நூல்கட்கும் இவர் உரைசெய்துள்ளார்.

திருவேங்கட அநுபூதி, இலக்கணச் சுருக்கம், சூடாரம், ஆத்துமபோதப் பிரகாசிகை முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். தமிழறிந்த ஆங்கிலேயர் சிலர் ஆங்கில—தமிழ் அகராதி ஒழுங்கு செய்த காலை உடனிருந்து பேருதவிபுரிந்துள்ளார்.

## உரை நயம்

இவர் செய்துள்ள நன்னூல்உரை விருத்தியுரையாதலின் தொல்காப்பியம் முதலிய நூல்களின் மேற்கோளுடன் நன்கு விரித்துரைக்கப்பட்டுள்ளது.

## உரைப்போக்கு

(ஆகுபெயர்)

"பொருண்முத லாறோ டளவைசொற் றானி
கருவி காரியங் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன வாகு பெயரே"

இது, திணைபாலிடத்தொன் றேற்பவும் பொதுவும் ஆம்' என மேற்கூறிய பெயர்களில் வருங் காரணப் பெயர்களுள் ஆகுபெயராமாறுணர்த்திற்று.

(இ-ள்.) பொருண்முதலாறோடு-பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்ற ஆறுடனே, அளவை - எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என்னும் நால்வகையளவும், சொல் - அடையடுத்தும் தனித்தும் வரும் மொழியும், தானி - தானத்தை யுடையதும், கருவி - காரணமும், காரியம் - கருமமும். கருத்தனாதியுள் - வினைமுதலு மாதியாயுள்ள இவற்றுள், ஒன்றன் பெயரான் - ஒரு பொருளினது இயற்பெயரினாலே, அதற்கியை பிறிதை-அப்பொருளுக்கு இயைந்த பிறிதுபொருளை, தொன்முறை - தொன்றுதொட்டு வரும் முறைப்படியே உரைப்பனவாகு பெயர் - சொல்லப்பட்டு வருவன ஆகு பெயர்களாம். (எ-று)

பொருளாதியாறனுள் அடங்கிநின்றனவற்றையே பிரித்து, அளவை முதலாகச் சொன்னதினாலே, 'பொருண்முதலாறு' என்றவை, இவை யொழிந்தன எனவும், 'அதற்கியை பிறிதை' யென்றதினாலே இயையாதனவற்றிற்கு வருவன ஆகு பெயராகாவெனவும், 'தொன்முறை யுரைப்பன'

என்றதனலே ஆகுபெயர்மேலாகுபெயராகியும், அடையடுத்தும், இருபெயரொட்டாகியும், வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் பயின்று பலபொருளொரு சொற்போல வருவன அன்றி இடையிலே தோன்றியபடி ஆக்கப்படுவன அல்ல எனவும் உய்த்துணர்ந்துகொள்க.

(வ-று.) தாமரை யனைய தாள், ஆம்பலனைய தேம்பொதி செவ்வாய் என்பன முதற்பொருளின் பெயர் அதன் சினைப்பொருளாகிய மலர்களுக்கு ஆயின.

"அகனமர்ந்து செய்யா ளுறையும்"
"புறங்கொடை யறியா மறந்திகழ் வேலோன்"

என அகம், புறம் என்னும் இடப்பெயர்கள் மனத்திற்கும் முதுகிற்கு மாயின.

காரறுத்தது, கார்த்திகை பூத்தது எனக்கார், கார்த்திகை என்னுங் காலப்பெயர், அக்காலத்திலுண்டாகும் பயிர்க்கும், வேங்தோன்றிக்குமாயின. இவற்றுள், கார் என்பது நிறம், அது மேகத்திற்காகி, மேகத்தின் பெயர், பருவத்திற்காகி, அப்பருவத்தின் பெயர் பயிருக்கானதினலே மும்மடியாகுபெயர்.

## கசா. ஆறுமுகநாவலர்

### பெயர்

ஆறுமுகன் என்பது இவருக்கு இவருடைய பெற்றோர்களால் இடப்பெற்ற இடுகுறிப்பெயர். 'நாவலர்' என்பது கல்விச்சிறப்பு மிக்கெய்திய பின்னர் அறிஞரால் அளிக்கப்பெற்ற சிறப்புப் பெயர்.

### இடம்

இவர் பிறந்த இடம் யாழ்ப்பாணத்தி (ஈழ நாட்டி)லுள்ள நல்லூர். கல்வி கற்றதும் பன்னாள் வசித்திருந்ததும் ஈண்டேயாம். பிற்காலத்தில் சிதம்பரம், சென்னை முதலிய இடங்களில் வசித்திருந்தார்.

### காலம்

இவருடைய காலம் நூற்றிருபதுயாண்டுகட்கு முன்னராம்.

### குலம்

கார்காத்த வேளாளர் குலம்.

### சமயம்

சைவசமயம்.

### வாழ்க்கைவரலாறு

யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தப்ப பிள்ளையென்பவருக்கும் சிவகாமியம்மையார் என்பவருக்கும் அருந்தவப் புதல்வராகத் தோன்றிய இவர், மிக விளமைக் காலத்தில் தானே கற்கவேண்டிய இலக்கண இலக்கியங்களையும் வடமொழி ஆங்கிலமொழி முதலிய பிறமொழிகளையும் ஐயந்திரிபறக் கற்று அவற்றிலெல்லாம் மிகவல்லுநராக விளங்கிவந்தார்

இவருடைய அறிவாற்றலை நன்குணர்ந்த கிறித்தவமதப் பாதிரிகள், தமது சமய வளர்ச்சிக்குத் தாம் தமிழ் கற்றலின்பொருட்டு இவரை யாசிரியராகக் கொண்டதுமன்றித், தமது சமய நூலாகிய கிறித்தவ மறையையும் உடனிருந்து மொழிபெயர்க்கச் செய்தனர். இத்தகைய செயல்களால் தமது சமயமாகிய சைவத்தின் வளர்ச்சி குன்றுதலையும் பிற சமயங்களின் வளர்ச்சி பெருகுதலையுங் கண்ட இவர் மிகவருந்திப் புறச்சமய வளர்ச்சிக்கு ஒரு சிறிதுந் துணைபுரியாதொழிந்ததுடன், சைவ சமய வளர்ச்சிக்குந் தமிழ் வளர்ச்சிக்குமே தமது உடல் பொருளாவி யாகியவைகளை முற்றும் பயன்படுத்தினார். தாம் இல்வாழ்க்கையிற் புகாதுநின்று, அவ் வாழ்க்கைக்குச் செலவிடவேண்டிய பொருளையுங் காலத்தையுஞ் சைவசமய வளர்ச்சிக்கே செலவிட்டார். யாழ்ப்பாணம் சிதம்பரம் முதலிய இடங்களிலே சைவப்பிரகாச வித்தியாசாலைகளை யேற்படுத்தினார். சைவசமயச் சொற்பொழிவுகளாற்றுவதினும் நூல்களெழுதுவதினும் இவர் ஆற்றல் மிக வாய்ந்தவர். இவருடைய சொற்பொழிவாற்றுந் திறமையைக்கண்டே 'நாவலர்' என்னுஞ் சிறப்புப் பெயர், திருவாவடுதுறை யாதீனத்துத் தலைவரால் இவருக்களிக்கப்பெற்றது.

இவர் பொருளின்பொருட்டும் புகழின்பொருட்டும் எவரையும் ஒரு பொருட்படுத்தார். சைவசமய வளர்ச்சியின்பொருட்டு எத்தகைய இடையூற்றுக்கும் அஞ்சாது வேலைசெய்தார். தமிழின் உரை நடை யிவராலேதான் திருந்திய பண்பினதாயிற்

றென்பது வெற்றுரையாகாது. ஆயுள்வரை மண மின்றியே யிருந்த இவர் ஒழுக்கநெறியிலும் இழுக் கிலா திருந்தார்.

ஒருகாற் சிலர் இவரையண்மி, "நீங்கள் நூல் களிலே எழுதுகிறீர்களே, அவ்விதமே நடைமுறை யிலும் நடக்கின்றீர்களா?" என்று வினவியதற்கு, இவர் அவர்களைப் பார்த்து "கைகாட்டிமரம் போக வேண்டிய ஊருக்குக் கையைக் காட்டுகின்றதே யன்றி அஃது அவ்வழியிற் செல்லுகின்றதா? ஏணி எல்லோரையும் மேலே போகச்செய்கின்றதே அது மேலே போகின்றதா? நானும் அவைகளைப் போலத்தான்" என்று விடையிறுத்தனராம்.

ஒருகால் இவரும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் மதுரை மீனாட்சியம்மன் கோவி லில் வழிபாடு செய்துகொண்டிருந்தபோது, வழி பாட்டினிறுதியில் நீறு முதலியன கொடுக்கவந்த கோவிற்குருக்கள் இவர்களிருவருடைய தோற்றத் தையுங் கண்டு இவர்களில் யார் பெரியவர், யாருக்கு முன்னரளிக்க வேண்டுமென்று ஒரு கணம் எண்ணமிட்டு நின்றனராம். அவர் தம்மெண் ணத்தை யறிந்த நாவலர்; "தாயுந்தந்தையும் ஆன வருக்கே (மீனாட்சி + சுந்தரம்) முன்னர்க் கொடுங் கள்" என்றனராம். உடனே மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் குருக்களை நோக்கி "தாயுந்தந்தை யும் விரும்புவது பிள்ளையையே (ஆறுமுகன்) ஆகை யால் அவருக்கே முன்னர்க்கொடுங்கள்" என்றனராம்.

### இலக்கண இலக்கியப் பயிற்சி

இக்காலத்திலுள்ள இலக்கணநூல், சங்கவிலக்கியங்கள், சமயநூல்கள் முதலிய எல்லாவற்றிலும் இவர் மிகவல்லவர்.

### சமகாலத்தாசிரியர்கள்

திருவருட்பா இராமலிங்கவடிகள், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, இராமாநுசக்கவிராயர், மழவை மகாலிங்கையர், திருத்தணிகை சரவணப்பெருமாளையர், விசாகப்பெருமாளையர், முதலியோர் இவர் காலத்தில் வாழ்ந்திருந்தவர்களாவர்.

### இவர்செய்த உரைகளும் நூல்களும்

நன்னூற் காண்டிகையுரை, கோயிற்புராணவுரை, சைவசமயநெறியுரை, திருச்செந்தில் நிரோட்டகயமகவந்தாதியுரை, இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை, மருதூரந்தாதியுரை, சிவதருமோத்தரவுரை, முதலிய உரை நூல்களும், திருவிளையாடற்புராண வசனம், பெரியபுராண வசனம், சைவவினா விடைகள், பால பாடங்கள் முதலிய உரை நடைத் தனிநூல்களு மிவரெழுதியுள்ளார்.

### இவருடைய தனிச் சிறப்பு

இவர் தாம் செய்த உரை நூல்களையும் உரை நடைநூல்களையும் தாமே பதிப்பித்ததன்றி, தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனாவரையருரை, திருக்குறள் பரிமேலழகருரை, திருச்சிற்றம்பலக் கோவையார் பேராசிரியர் உரை, முதலிய உரை நூல்களையும்; கந்தபுராணம், பெரியபுராணம், வில்லி

புத்தூரார் பாரதம் முதலிய தனி நூல்களையும் முழு வறப் பரிசோதித்துத் தாமே அவைகளை வெளியிட்டிருக்கிறார். இவர் ஒவ்வொரு நூல்களையும் பதிப்பிடுங் காலத்தில், பலரைக்கொண்டு பதிப்புப் பிழை பார்க்கச் செய்து பிழையில்லாமல் நூல்களைப்பதிப்பிப்பதில் பேருக்கங்காட்டியிருக்கின்றார். இவர் தாம் பதிப்பிக்கும் நூல்களைத் தக்க ஆதாரமில்லாமல் திருத்தமாட்டார். பாட மாறுபாடுகளைச் சேர்க்க மாட்டார். நூல்களைப் பிழையற அழகிய முறையில் வெளியிடும் முறையை முதல் முதல் தமிழ் உலகிற் செய்தவர் இவரே. தமிழ்மொழி வளர்ச்சிக்கும் சமயப் பாதுகாப்புக்கும் இவருழைத்தவுழைப்பு மிகவும் போற்றத்தக்கது.

# பிழை திருத்தம்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 26 | 12 | தமருமர் | தருமர் |
| 31 | 6 | விரித்துவர் | விரித்து |
| | | விளக்குவர் | விளக்குவர் |

Royal Printing Works, Mount Road, Madras, P. 1. Gard
Q.H. MS. 175—1100 Copies.